தமிழில்

அஷ்டலக்ஷ்மி வெளியீடு

# ஆங்கில இலக்கணம்

EASY ENGLISH GRAMMAR

மாணவர்களுக்கு
பெரிதும்
பயன்படக்கூடிய
கை நூல்

சிவா பிறிண்டேர்ஸ் கைதடி

தமிழில்

# ஆங்கில இலக்கணம்

ஆசிரியர்:


க. சிவசுப்பிரமணியம் B. A, LL.B (SL)



அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம்
சிவா அச்சகம்
41, கண்டி வீதி
கைதடி

நூல்: தமிழில் ஆங்கில இலக்கணம்

ஆசிரியர்: கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்கள்

முகவரி: சட்டத்தரணி, ஊரெழு சுன்னாகம்

பதிப்பு: முதலாவது பதிப்பு (01-04-1994)

பதிப்புரிமை: ஆறுமுகம் கந்தையா J. P உரிமையாளர், சிவா அச்சகம், கைதடி.

அச்சுப்பதிப்பு: ஸ்ரீ மகாலட்சுமி அச்சகம், யாழ்ப்பாணம்.

தமிழில் ஆங்கில இலக்கண விதிகள் எளியமுறையில் விளக்கப்பட்டுள்ள பயனுள்ள நூல். ஆங்கிலத்தில் வியாபாரக் கடிதங்கள் மாணவர் கடிதங்கள் மற்ற கடிதங்கள் எழுதும் முறைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன செய்முறைப் பயிற்சிகள் அதிகமாக சேர்க்கப்பட்டுள்ளன.

★ ★

வியாபாரிகள், மாணவர்கள்
ஆகிய அனைவருக்கும் பயன்தரும்
நல்லதொரு தமிழ்நூல்

விலை ரூபா; 65/-

# முன்னுரை

ஆங்கிலம்! அனைத்துலக மொழி! அறிவியல் கருவூலங்கள் அனைத்தும் அடங்கிய ஒரு அழகுப் பெட்டகம்

ஆங்கில மொழியின் அறிவு நமக்கு இருந்தால் அகிலத்தைப் பற்றிய அனைத்து விஷயங்களையும் நாம் அறிய அது உதவி புரிகின்றது ஆங்கிலமொழி கற்றவரால், உலகத்தின் எப்பகுதியிலும் சிரமமின்றி உலாவரவியலும். ஏனெனில் உலகிலுள்ள அனைத்து நாட்டினரும் அறிவு வளர்ச்சிக்காக அறிவியல் கலையின் அற்புதமான புத்தம் புதிய படைப்புகளை உடனடியாக அறிந்து, தத்தம் நாடுகளை வளப்படுத்த ஆங்கிலத்தை ஆர்வத்துடன் கற்கின்றனர். தவிர பன்னாட்டு வணிக நிறுவனங்களும் மாபெரும் தொழில் நிறுவனங்களும் ஆங்கிலமொழியையே தம் வணிகபேரங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர் எனவே உலகின் எப்பாகத்திற்கு நாம் சென்றாலும் ஆங்கிலம் கற்ற சிலரை சந்தித்து நம் தேவைகளைக்கூறி அவற்றை எளிதில் பெறமுடிகின்றது.

ஆனால் ஆங்கிலமொழி அறிவுமட்டும் இல்லாமலிருந்தால் அத்தகையோர் அன்னியநாடுகளில் படும் அவதி, பேரவதி ஆதும் மற்றநாட்டினர் அவர்களைக் கிணற்றுத் தவளைகளாகக் எள்ளி நகையாடுவர்.

எனவே இத்தகைய பெரும் பயன்பயக்கும், ஆங்கில மொழியை நம் இலங்கையில் எளிதில் கற்க உதவும் பொருட்டு இந்தப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் ஆங்கிலமொழியின் இலக்கண அமைப்பு அம்மொழியைக் கையாளும்முறை ஆகியவை எளிய தமிழ்விளக்கவுரைகளுடன் விவரிக்கப்பட்டுள்ளது சராசரியான தமிழறிவு படைத்த எவரும் இப்புத்தகத்தைப் படிப்பதின் மூலம் ஆங்கிலமொழி அறிவை எளிதில் பெறலாம். தவிர இதில் தரப்பட்டுள்ள பயிற்சிகள் எளிமையான விளக்கங்கள் ஆகியவை முறையான ஆங்கில அறிவைக் குறுகியகாலத்தில் அடையப்பயன்படும் தவிர ஆங்கில மொழியைத் தவறின்றி எழுத, படிக்க பேச மிக்க உதவி புரியும்.

ஆகவே ஆங்கிலமொழியைக் கற்க விரும்பும் அன்பர்கள் இப்புத்தகத்தை நன்கு பயன்படுத்துவதோடு. மேலும் இத்தகைய புத்தகங்கள் தமிழ்மொழியில் வெளியிடத் தம் நல்லாதரவினை நல்க வேண்டுகிறேன். இதனை ஆக்கி உதவிய ஊரெழு சட்டத்தரணி க. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு எமது நன்றி.

கைதடி
14 04-94

ஆறுமுகம் கந்தையா J. P
வெளியீட்டாளர்

# CONTENTS - உள்ளடக்கம்


1 LETTER - எழுத்து
2 SENTENCE - வாக்கியம்
3 OBJECT - செயப்படுபொருள்
4 PARTS OF SPEECH - சொல்லிலக்கணக் கூறுகள்
5 NOUN - பெயர்ச்சொல்
6 GENDER - பால்
7 LIST OF ABSTRACT NOUNS - பண்புப்பெயர்பட்டியல்
8 NUMBER - எண்
9 PRONOUN - மறுபெயர்ச்சொல்
10 ADJECTIVE - உரிச்சொல்
11 ARTICLES - சுட்டிடைச்சொற்கள்
12 VERB - வினைச்சொல்
13 INFINITIVES - முடிவுறா வினைச்சொற்கள்
14 PARTICIPLE - வினைவழிப் பெயரெச்சம்
15 GERUND - தொழிற்பெயர்
16 TENSE காலம்
17 PERSON - இடம்
18 PREPOSITION - முன்னிடைச் சொல்
19 CONJUNCTION - இணைப்புச்சொல்
20 INTERJECTION - வியப்புச்சொல்
21 PRESENT TENSE DIVISIONS - நிகழ்காலத்தின் நான்கு வகைகள்
22 PAST TENSE DIVISIONS - இறந்தகாலத்தின் நான்கு வகைகள்
23 FUTURE TENSE DIVISIONS - எதிர்காலத்தின் நான்கு வகைகள்
24 ACTIVE VOICE AND PASSIVE VOICE - செய்வினை செயப்பாட்டுவினை
25 ACTIVE VOICE - செய்வினை
26 PASSIVE VOICE - செயப்பாட்டுவினை
27 DIRECT AND INDIRECT SPEECH - நேர்கூற்று அயற்கூற்று
28 FRAMING OF QUESTION - வினாக்களை அமைத்தல்
29 LETTER - WRITING - கடிதங்கள் எழுதுதல்
30 BUSINESS LETTERS - வியாபாரக் கடிதங்கள்
31 SOCIAL AND FRIENDLY LETTERS AND STUDENT LETTERS

# 1. LETTER - எழுத்து

ஒரு மொழியின் இலக்கணத்தை நாம் அறிவதால் அம்மொழியைத் தவறின்றிப் பேச, படிக்க, எழுத நம்மால் இயலுகிறது.

ஆனால் தமிழ் மொழியின் இலக்கண அமைப்புக்கும், ஆங்கில மொழியின் இலக்கண அமைப்புக்கும் இடையே வேற்றுமைகள் உள்ளனவா? நிறைய உள்ளன. ஆராய்வோமாக.

தமிழ், ஆங்கில எழுத்துகளின் எண்ணிக்கை

தமிழ்மொழி எழுத்துகளின் எண்ணிக்கை பின் வருமாறு:

உயிரெழுத்துக்கள் - 12 (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)
மெய்யெழுத்துகள் - 18 (க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்,)
மொத்தம் 30

தமிழில் உயிர்மெய்யெழுத்துக்கள் - $18 \times 12 = 216$
ஆய்த எழுத்து = 1
உயிரெழுத்துகள் + மெய்யெழுத்துகள் = 30
தமிழில் ஆக மொத்தம் 247 எழுத்துகள்

ஆங்கிலமொழி (English) எழுத்துகள்.

உயிரெழுத்துகள் (VOWELS) - 5 (A,E,I,O,U)
மெய்யெழுத்துகள் (CONSONANTS) - 21 (B,C,D,F,G,H,J,K,L,M,N,P,Q,R,S,T,V,W,X,Y,Z)

ஆங்கிலத்தில் ஆக மொத்தம் 26 எழுத்துகள் மட்டுமே உண்டு. ஆனால் உயிர்மெய்யெழுத்துகள் — கிடையாது. அவற்றை நாம்தான் உருவாக்கிக்கொள்ளவேண்டும்.

உதாரணம்

ராமன் — RA MA N காசி — KA SI
ரா ம ன் கா சி

மேற்கூறிய உதாரணம் ஆங்கில மொழியிலுள்ள 5 உயிரெழுத்துக்களை வைத்துக்கொண்டு, அத்துடன் 21 மெய்யெழுத்துகளை இணைத்து தேவையான மெய்யெழுத்துகளை நாம்தான் உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்பதை விளக்குகிறது.

மேலும் உதாரணங்கள்

கந்தன் — KAN DAN நாராயணன் NA RA YA NAN
கந் தன் நா ரா ய ணன்

திருப்பூர் — TI RUP PUR ஈரோடு E RO DE
தி ருப் பூர் ஈ ரோ டு

எனவே தமிழ் உயிர்மெய்யெழுத்துகளுக்கு சரியான ஆங்கில மெய்யெழுத்துக்களைப் படைக்க, இருக்கும் 26 ஆங்கில எழுத்துகளை வைத்துக்கொண்டு "சர்க்கஸ் கூண்டு" விளையாட்டை நாம் நடத்த வேண்டும். சிறிது ஆங்கில அறிவு நமக்கு ஏற்பட்டதும், இச் செயலைச் செய்தால் எளிதாக இருக்கும். சிரமமில்லை. வேண்டிய தெல்லாம் தமிழ் உயிர்மெய்யெழுத்தின் ஒலிக்கு ஏற்ப ஆங்கில உயிர்+மெய் எழுத்துகளை உதாரணங்களில் காட்டியவாறு நாம் இணைக்க வேண்டும் என்பதே.

# 2. SENTENCE - வாக்கியம்

தமிழ் வாக்கிய அமைப்புக்கும், ஆங்கில வாக்கிய அமைப்புக்கும் இடையே சிலவேற்றுமைகளுண்டு. அவற்றை ஆராய்வோம்.

உதாரணம் *(Example)* ஆங்கில மொழி பெயர்ப்பு:-

1. ரவி ஒரு நல்ல பையன் — Ravi is a good boy
ரவி இருக்கிறான் ஒரு நல்ல பையன்

2. பாலு வீட்டுக்குச் சென்றான் — Balu went to the house
பாலு சென்றான் க்கு வீடு

மேற்காணும் உதாரணங்கள் தமிழ்மொழி வாக்கியத்திற்கும் ஆங்கிலமொழி வாக்கியத்திற்கும் இடையே உள்ள அமைப்பு வேற்றுமையை நன்கு உணர்த்தும். எனவே ஆங்கில வாக்கியங்களை நாம் தமிழில் மொழி பெயர்க்கும்போது, தமிழ்மொழி அமைப்புக்கு ஏற்ப அவைகளை மொழிபெயர்க்க வேண்டும்.

SUBJECT (எழுவாய்), PREDICATE (பயனிலை)

ஒரு வாக்கியத்திலுள்ள எழுவாயும், பயனிலையும் சேர்ந்து ஒரு முழுமையான கருத்தைத் தெரிவிக்கின்றன.

உதாரணம்

Subject Predicate எழுவாய் பயனிலை

Raman reads a lesson ராமன் ஒரு பாடத்தைப் படிக்கிறான் மேற்காணும் வாக்கியத்தில் "ராமன் (RAMAN)" எழுவாய் (Subject) ஆகும், "ஒரு பாடத்தைப் படிக்கிறான் (reads a lesson) என்பது பயனிலை (Predicate)" ஆகும்.

இவை இரண்டும் இணைந்து ஒரு முழுமையான கருத்தை அதாவது ராமன் என்ன செய்கிறான்? என்பதைத் தெரிவிக்கின்றன.

மேலும் உதாரணங்கள் :-

| | Subject | Predicate | எழுவாய் | பயனிலை |
|---|---|---|---|---|
| 1. | Ravi | draws a picture | - ரவி | ஒருபடத்தைவரைகிறான் |
| 2. | I | bought a ball | - நான் | ஒரு பந்தை வாங்கினேன் |
| 3. | The dog | - barks loudly | - அந்தநாய் | உரத்தகுரலில் குரைக்கின்றது |

Exercise (பயிற்சி)

கீழ்க்காணும் ஆங்கில வாக்கியங்களை Subject, Predicate ஆக பிரித்து உதாரணத்தில் காட்டியவாறு எழுதவும்.

1. Parvathi cleaned the room. (பார்வதி அறையை சுத்தம் செய்தாள்)
2. John sings a song (ஜான் ஒரு பாட்டைப் பாடுகிறான்)
3. Sita eats a fruit (சீதா ஒரு பழத்தை உண்கிறாள்)
4. Vasu writes a letter (வாசு ஒரு கடிதத்தை எழுதுகிறான்)
5. He buys a pen (அவன் ஒரு பேனாவை வாங்குகிறான்)
6. We play foot ball (நாம் கால்பந்து ஆடுகிறோம்)
7. This house is big (இந்த வீடு பெரிதாக உள்ளது)
8. Anwar went to school (அன்வர் பள்ளிக்கூடம் சென்றான்)
9. Raju brings a bag (ராஜு ஒரு பையைக் கொண்டுவருகிறான்)
10. Kasi got a prize (காசி ஒரு பரிசை அடைந்தான்)
11. They will go to school (அவர்கள் பள்ளிக்கூடம் செல்வார்கள்)
12. Mani takes a pen (மணி ஒரு பேனாவை எடுக்கிறான்)

# 3. OBJECT - செயப்படுபொருள்

ஒரு வாக்கியத்தில் Subject (எழுவாய்) Predicate (பயனிலை) இவற்றைத்தவிர Object (செயப்படுபொருள்) எனும் ஒரு பிரிவும் உள்ளது. அதைக் காண்போம்.

உதாரணம்

1. Kandan makes a box (கந்தன் ஒரு பெட்டியைச்செய்கிறான்)

இந்த வாக்கியத்தில் Subject எது? — Kandan (கந்தன்)
ஆனால் Predicate எது? — Makes (செய்கிறான்)
கந்தன் எதைச் செய்கிறான்? — a box (ஒரு பெட்டியை)

எனவே a box (ஒரு பெட்டி) என்பது வாக்கியத்தின் OBJECT (செயப்படுபொருள்) ஆகும்.

மேலும் உதாரணங்கள்:-

| | SUBJECT | PREDICATE | OBJECT | |
|---|---|---|---|---|
| 1. | Sarada | reads | a book | (சாரதா ஒரு புத்தகம் படிக்கிறாள்) |
| 2. | Mary | writes | a lesson | (மேரி ஒரு பாடத்தை எழுதுகிறாள்) |
| 3. | Sivan | buys | a pen | (சிவன் ஒரு பேனா வாங்கினான்) |
| 4. | Kasim | brings | a bag | (காசிம் ஒரு பையை கொண்டுவருகிறான்) |

மேற்கூறிய உதாரணங்கள் Subject, Predicate, Object ஆகியவற்றை ஒரு வாக்கியத்திலிருந்து எவ்வாறு பிரிப்பதென்பதைத் தெளிவாக்குகின்றன.

இவற்றை நன்கு கவனித்துப் படிக்கவும்

Exercise – பயிற்சி

கீழ்க்கண்ட வாக்கியங்களில் Subject, Predicate, Object ஆகியவற்றை உதாரணங்களில் காட்டியவாறு பிரித்து எழுதவும் (ஒரு நல்ல English - Tamil (ஆங்கில - தமிழ்) அகராதியை சொற்களின் அர்த்தங்காண பயன்படுத்தவும். அகராதியின் துணை ஆங்கிலம் கற்பவர்களுக்கு மிகவும் அவசியம்.)

1. Vasu cleans a table (வாசு ஒரு மேசையைத் துடைக்கிறான்)
2. I cut an apple (நான் ஒரு ஆப்பிளை நறுக்குகிறேன்)
3. Ahmed draws a picture (அஹமத் ஒரு படம் வரைகிறான்)
4. John sings a song (ஜான் ஒரு பாட்டைப் பாடுகிறான்)
5. Nalini washes a saree (நளினி ஒரு சேலையைத் துவைக்கிறாள்)

6. Leela picks a flower (லீலா ஒரு மலரைப் பறிக்கிறாள்)
7. We buy sweets (நாம் இனிப்புகளை வாங்குகிறோம்)
8. They love cats (அவர்கள் பூனைகளை நேசிக்கிறார்கள்)
9. He breaks a stick (அவன் ஒரு குச்சியை உடைக்கிறான்)
10. You take a pencil (நீ ஒரு பென்சிலை எடுக்கிறாய்)

Exercise – பயிற்சி

ஒரு ஆங்கிலப் பாடப்புத்தகத்தை (English Text book) எடுத்து அதிலுள்ள இருபது அல்லது அதற்கு மேற்பட்ட வாக்கியங்களைப் பொறுக்கி எடுத்து, அவற்றிலுள்ள Subject, predicate Object ஆகியவற்றைத் தனித்தனியே பிரித்து எழுதவும். (குறிப்பு: ஆங்கிலத்தை விரைவில் தவறின்றிக் கற்க மேற்கூறிய பயிற்சிகள் மிகவும் பயன்படும். எனவே பயிற்சிகளை தவறாது கவனத்துடன் செய்யவும்.)

# 4. PARTS OF SPEECH
# சொல்லிலக்கணக் கூறுகள்

ஆங்கில இலக்கணத்தில் (English Grammar) எட்டு சொல்லிலக்கணக் கூறுகள் உள்ளன. அவை பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1. | NOUN | பெயர்ச்சொல் |
| 2. | PRONOUN | (பெயர்ச்சொல்லை குறிக்கும்) மறுபெயர் |
| 3. | ADJECTIVE | பெயர் உரிச்சொல் |
| 4. | VERB | வினைச்சொல் |
| 5. | ADVERB | வினைஉரிச்சொல் |
| 6. | PREPOSITION | (பெயர்ச்சொல் தழுவும்) முன்னிடைச் சொல் |
| 7. | CONJUNCTION | இணையிடைச்சொல் |
| 8. | INTERJECTION | வியப்புச்சொல் |

மேற்கூறிய சொல்லிலக்கணக் கூறுகளை ஓரளவு நாம் அறிந்து கொள்ளுதல், ஆங்கில மொழி அமைப்பினைப் புரிந்து கொள்ள உதவியாயிருக்கும். இனி மேற்கூறிய சொல்லிலக்கணக் கூறுகளை (Parts of speech) பின்வரும் பாடங்களில் படிப்போம்.

தமிழ், ஆங்கில எழுத்துகளுக்கிடையே உள்ள ஒலி வேற்றுமைகளை நாம் ஆராய்ந்து நினைவில் இருத்திக் கொள்ளுதல் ஆங்கிலச் சொற்களை சரியான உச்சரிப்புடன் படிக்கப் பயன்படும்.

உதாரணமாகக் கீழ் கண்ட ஒலிகளுள்ள ஆங்கில எழுத்துகளுக்கு சரியான ஒலியுள்ள தமிழ் எழுத்துகள் கிடையாது.

B, D, F, G, H, J, X, Z முதலியன.

உதாரணம்: Boy, Dog, Fan, Hat, Jug, Box, Zebra

அவ்வாறே கீழ்க்கண்ட தமிழ் எழுத்துகளின் ஒலிகள் உள்ள ஆங்கில எழுத்துகள் கிடையாது.

ழ, ள, ஞ, ங, ண

உதாரணம்: அழகு, குளம், ஞானி, நுங்கு, பணம்.

மேற்கூறியதமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் ஓரளவு அதைப் போன்று ஒலிக்கக் கூடியதாக மட்டும் நாம் எழுதமுடியும். சரியான ஒலிகளுடன் எழுதவியலாது.

உதாரணம்:

| | | | |
|---|---|---|---|
| 1. அழகு | Alagu | ("ழ" | ஒலி சரியாக இருக்காது) |
| 2. குளம் | Kulam | ("ள" | ,, ) |
| 3. ஞானி | Gnani | ("ஞ" | ,, ) |
| 4. நுங்கு | Nungu | ("ங" | ,, ) |
| 5. பணம் | Panam | ("ண" | ,, ) |

இருப்பினும் நாம் இவ்வார்த்தைகளைப் படிக்கும்போது ஓரளவு அனுபவம் இருப்பதால், அவற்றை சரியாகப் புரிந்து கொள்ளுதல் எளிதாகும்.

# 5. NOUN - பெயர்ச் சொல்

பெயரைக் குறிப்பிடுவது பெயர்ச்சொல் ஆகும். அது ஒரு நபரையோ (Person) அல்லது ஒரு பொருளையோ (Thing) குறிக்கும் ஒரு சொல்லாக (Word) இருக்கும்.

உதாரணம்:

| | |
|---|---|
| 1. நபரின் பெயர்கள் (Person) | Govindan (கோவிந்தன்), Sita (சீதா) John (ஜான்), Anwar (அன்வர்) |
| 2. பொருளின் பெயர்கள் (Thing) | Book (புத்தகம்) Pen (பேனா) Chair (நாற்காலி) Table (மேஜை) |

ஆங்கில மொழியில் (Nouns) பெயர்ச் சொற்களை நான்கு வகைகளாகப் பிரித்துள்ளனர். அவை பின்வருமாறு:

| வகை: | உதாரணம்: |
|---|---|
| 1. PROPER NOUN (பெயர் குறிக்கும் பெயர்ச்சொல் | Ravi *(ரவி)* Geetha *(கீதா)* Mani *(மணி)* |
| 2. COMMON NOUN பொதுப்பெயர்ச்சொல் | Girl (சிறுமி) School *(பள்ளிக் கூடம்)* House *(வீடு)* Boy *(சிறுவன்)* |
| 3. COLLECTIVE NOUN குழுப்பெயர்ச்சொல் | People *(மக்கள்)* Family *(குடும்பம்* Crowd (கூட்டம்) Assembly *(சபை)* |
| 4. ABSTRACT NOUN பண்புப் பெயர்ச்சொல் | Hope *(நம்பிக்கை)* Love (அன்பு) Charity (தர்மம்) Pity (இரக்கம்) |

மேற்காணும் உதாரணங்களை நன்கு கவனிக்கவும்.

1. Proper Nouns என்பவை Ravi, Geetha, Mani போன்ற நபர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன.
2. Common Noun என்பவை Girl, School, House, Boy போன்ற பொதுப்பெயர்களைக் குறிப்பிடுகின்றன,
3. Collective Nouns என்பவை People, Family, Crowd, Assembly போன்ற கூட்டங்களைக் குறிக்கும் பெயர்களாக உள்ளன. இவற்றின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை.
4. Abstract Nouns என்பவை Hope, Love,Charity, Pity போன்ற பண்புகளைக் குறிக்கும் பெயர்களாக உள்ளன. இவற்றை நாம் கண்களால் பார்க்கவியலாது. மனதில் உணரத்தான் முடியும்.

(குறிப்பு: நாடு, ஊர், நதி, மலை ஆகியவற்றிற்குக் குறிப்பான பெயர்கள் இருந்தால் அவைகளும் "Proper Nouns" ஆகும்)

உதாரணம்: **(PROPER NOUNS)** :

India (இந்தியா) Jappan *(ஜப்பான்)* நாடுகள். Madras *(மதராஸ்)* Erode ஈரோடு ஊர்கள். Cauvery *(காவிரி)* Yamuna *(யமுனா)* நதிகள். Himalaya (இமாலயம்) (Vindhya *(விந்திய)* மலைகள்

மேற்கூறியவையும் Proper Nouns வகையைச் சேர்ந்தவை ஆகும்.

Exercise – பயிற்சி

கீழ்க்கண்ட சொற்களில் Proper Nouns, Common Nouns, Collective Nouns, Abstract Nouns ஆகியவற்றைத் தனித்தனியே பிரித்து எழுதவும்.

Kandan (கந்தன்) Malini (மாலினி) Bench (பெஞ்சு) Lad (சிறுவன்) Woman (பெண்) Garden (தோட்டம்) Army (படை) Kindness (அன்பு) Tiruppur (திருப்பூர்) Pride (கர்வம்) River Krishna (கிருஷ்ணா நதி) Mount Everest (எவரெஸ்ட்மலை) Merchant (வியாபாரி) England (இங்கிலாந்து) Cot (கட்டில்) Cat (பூனை) Justice (நியாயம்) Mob (கும்பல்) Service (சேவை)

# 6. GENDER - பால்

ஆங்கில இலக்கணத்தில் உள்ள பால்கள் பின்வருமாறு:

| வகை: | உதாரணம்: |
|---|---|
| 1. MASCULINE GENDER ஆண் பால் | Bull (எருது) Tiger (புலி) Brother (சகோதரன்) Cock (சேவல்) |
| 2. FEMININE GENDER பெண் பால் | Cow (பசு) Tigeress (பெண்புலி) Sister (சகோதரி) Hen (கோழி) |
| 3, COMMON GENDER பொதுப்பால் | Person (நபர்) Parent (பெற்றோர்) Orphan (அனாதை) Enemy (எதிரி) |
| 4. NEUTER GENDER உயிரற்ற பொருட்பால் | Door (கதவு) Bell (மணி) Shop (கடை) Ball (பந்து) |

மேற்கூறிய உதாரணங்களில் Common Gender என்பது ஆணையும், பெண்ணையும் பொதுவாகக் குறிப்பிடுவதைக் கவனிக்கவும்.

Neuter Gender உயிரற்ற பொருட்களைக் குறிக்கிறது.

1. Exercise - பயிற்சி

கீழ்க்கண்ட சொற்களில் Masculine Gender, Feminine Gender, Common Gender, Neuter Cender ஆகியவற்றைத் தனித்தனியே பிரித்து எழுதவும்:

Window *(சன்னல்)* Lion *(சிங்கம்)* Aunt (அத்தை) Son *(மகன்)* Plant (செடி) Servant *(பணியாள்)* Actress (நடிகை) Pillar *(தூண்)* Baby *(குழந்தை)* Dog (நாய்) Bitch (பெண்நாய்) Husband (கணவன்) Nail *(ஆணி)* Wife (மனைவி)

2. Exercise – பயிற்சி

ஏதாவது ஒரு ஆங்கிலப் பாட புத்தகத்தை எடுத்து அதிலுள்ள 4 வகை Gender களைச் சார்ந்த வார்த்தைகள் வகைக்கு இரு பதாகப் பொறுக்கி எடுத்து எழுதவும். இப்பயிற்சியை English - Tamil அகராதியின் துணைகொண்டு செய்தல் ஆங்கில அறிவை நாம் விரைவில் பெற உதவும்.

# 7. List of Abstract Nouns
# பண்புப் பெயர்களின் பட்டியல்

Abstract Nouns (பண்புப் பெயர்கள்) Noun *(பெயர்ச்சொல்)* Verb *(வினைச்சொல்* Adjective *(உரிச்சொல்)* ஆகியவற்றிலிருந்து உருவாகின்றன. கீழ்கண்ட பட்டியல் அதனை விளக்கும்,

| Nouns *(பெயர்ச்சொற்கள்)* | Abstract Nouns (பண்புப்பெயர்கள்) |
|---|---|
| King (மன்னன் | Kingdom *(மன்னனின் இராஜ்யம்)* |
| Infant (குழந்தை) | Infancy (குழந்தைப் பருவம்) |
| Slave (அடிமை) | Slavery (அடிமைத்தனம்) |
| Comrade (தோழன்) | Comradeship (தோழமை) |
| Friend (நண்பன்) | Friendship *(நட்பு)* |
| Beggar *(யாசகன்)* | Beggary *(யாசகம்)* |
| Coward (கோழை) | Cowardice *(கோழைத்தனம்)* |
| Hero *(வீரன்)* | Heroism (வீரத்தன்மை) |
| Patriot (தேசபக்தன்) | Patriotism *(தேசபக்தி)* |

Adjectives உரிச்சொற்கள்

| | |
|---|---|
| Good *(நல்ல)* | Goodness *(நல்லதன்மை)* |
| Kind *(அன்பான)* | Kindness *(அன்பு)* |
| Dark *(இருட்டான)* | Darkness *(இருட்டுச் சூழ்நிலை)* |
| Hard *(கடினமான)* | Hardness *(கடினத் தன்மை)* |

Brave (வீரமான) Bravery (வீரத்தன்மை)
Honest (நேர்மையான) Honesty (நேர்மைத்தன்மை)

VERBES வினைச்சொற்கள்:

Hate (வெறுத்தல்) Hatred (வெறுப்பு)
Collect (சேகரித்தல்) Collection (சேகரிப்பு)
Act (செயல்படல்) Action (செயல்)
Serve (சேவைபுரிதல் Service (சேவை)
Flee (ஓடுதல்) Flight (ஓட்டம்)
Discuss (விவாதித்தல்) Discussion (விவாதம்)
Free (விடுவித்தல்) Freedom (விடுதலை)
Discover (கண்டுபிடித்தல் Discovery (கண்டுபிடிப்பு)
Live (வாழ்தல்) Life (வாழ்க்கை)
See (பார்த்தல்) Sight (பார்வை)
Punish (தண்டித்தல்) Punishment (தண்டனை)
Hinder (தடுத்தல்) Hindrance (தடை)
Laugh (சிரித்தல்) Laughter (சிரிப்பு)
Die (இறத்தல்) Death (இறப்பு)
Know (அறிதல்) Knowledge (அறிவு)

மேற்கூறிய சொற்களைப் போல இன்னும் பல சொற்கள் உள்ளன. ஆங்கிலத்தைத் தொடர்ந்து கற்கும்போது அவைகளை நாளடைவில் நாம் அறிந்து கொள்ளலாம். இவ்விஷயத்தில் அகராதியும் நமக்கு உதவும். (English - Tamil Dictionary) ஆங்கில - தமிழ் அகராதியைப் பயன்படுத்தவும்.

# 8. NUMBER - எண்

தமிழ் இலக்கணத்தைப் போலவே, ஆங்கில இலக்கணத்திலும் Singular (ஒருமை) Plural (பன்மை) என்னும் பிரிவுகள் உண்டு. தமிழில் "கள்" எழுத்துகளை ஒருமையோடு சேர்த்தால் அது பன்மையாக மாறும். (உதாரணம்: ஆடு – ஆடுகள், ஆண் – ஆண்கள், பெண் - பெண்கள்) ஆனால் ஆங்கிலத்தில் அவ்வாறல்ல மாறுபடும். அவற்றை அறிவோமாக. சில ஆங்கில ஒருமைச் சொற்களோடு "S" அல்லது "E S" எனும் எழுத்துகளைச் சேர்த்தால் அவை பன்மையாக மாறும். சில சொற்களுக்கு "EN" அல்லது "EE" போன்ற எழுத்துகளைச் சேர்த்து அவற்றைப் பன்மையாக மாற்றலாம்.

உதாரணங்கள்:

1. "S" எழுத்து சேர்ப்பதால் பன்மையாகுதல்:
Hen (கோழி) Hens (கோழிகள்) Table (மேசை) Tables (மேசைகள்) Goat (வெள்ளாடு) Goats (வெள்ளாடுகள்) Ball (பந்து) Balls (பந்துகள்)

2. "ES" எழுத்துகள் சேர்த்தல்:
Brush (துடைப்பான்) Brushes (துடைப்பான்கள்) Box (பெட்டி) Boxes (பெட்டிகள்) Fox (நரி) Foxes (நரிகள்) Echo (எதிரொலி) Echoes (எதிரொலிகள்)

3. "VES" எழுத்துகள் சேர்த்தல்:
Wife (மனைவி) Wives (மனைவிகள்) Knife (கத்தி) Knives—கத்திகள்
Loaf (ரொட்டித்துண்டு) Loaves (ரொட்டித்துண்டுகள்) Leaf (இலை) Leaves (இலைகள்)

4. "EN" எழுத்துகள் சேர்த்தல்:
Ox (எருது) Oxen (எருதுகள்) Child (குழந்தை) Childen (குழந்தைகள்)

5. "EE" எழுத்துகள் சேர்த்தல்:
Tooth (பல்) Teeth (பற்கள்) Goose (வாத்து) Geese (வாத்துகள்)

6. "IES" எழுத்துகள் சேர்த்தல்:
Baby (குழந்தை) Babies (குழந்தைகள்)
Lady (மங்கை) Ladies (மங்கையர்)
City (நகரம்) Cities (நகரங்கள்)
Pony (மட்டக்குதிரை) Ponies (மட்டக்குதிரைகள்)

7. ஒரே வார்த்தை ஒருமைக்கும் பன்மைக்கு பயன்படல்.
Swine (பன்றி) Swine (பன்றிகள்)
Sheep (செம்மறியாடு) Sheep (செம்மறியாடுகள்)

# 9. PRONOUN - மறுபெயர்ச்சொல்

ஒரு Noun க்குப் (பெயர்ச்சொல்) பதிலாகப் பயன்படுத்தும் சொல்லுக்கு Pronoun (மறுபெயர்ச் சொல்) எனப் பெயர்.

உதாரணம்:

Balu plays well because Balu is strong.

பாலு நன்றாக விளையாடுகிறான். ஏனெனில் பாலு வலிமையுள்ளவன்.

மேற்கூறிய வாக்கியத்தில் ,,Balu'' எனும் சொல் இரு முறை வருகின்றது. இதை ஒருமுறையாகக் குறைக்கலாம். அதற்காக இரண்டாம் முறையாக வரும் ''Balu'' எனும் சொல் லுக்குப் பதிலாக ''He'' (அவன்) எனும் Pronoun ஐ நாம் சேர்க்க வேண்டும். உதாரணத்தைக் கவனிக்கவும்.

Balu plays well because he is strong.

பாலு நன்றாக விளையாடுகிறான், ஏனெனில் அவன் வலிமையுள்ளவன்,

மேற்கூறிய வாக்கியத்தில் ''He'' எனும் சொல்லானது ''Balu'' வைக் குறிக்கின்றது. இது pronoun ஆகும்.

REFLEXIVE PRONOUNS:
(தன்னையே குறிக்கும் மறுபெயர்ச் சொற்கள்:

உதாரணம்;

1, I Selected the book myself
அந்தப் புத்தகத்தை நானேதான் தேர்ந்தெடுத்தேன்.

2. He hurt himself
அவனேதான் வலிய அடிபட்டுக்கொண்டான்.

மேற்கூறிய உதாரணங்களிலுள்ள myself (நானேதான்) himself (அவனேதான்) போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் Reflexive pronouns என அழைக்கப்படும். கீழ்க்கண்ட சொற்களும் Reflexive pronouns ஆகும்.

உதாரணங்கள்:

| | |
|---|---|
| You (நீ) | Yourself (நீயேதான்) |
| You (நீங்கள்) | Yourselves (நீங்களேதான்) |
| She (அவள்) | Herself (அவளேதான்) |
| Cat (பூனை) | Itself (அதுவேதான்) |
| We (நாம்) | Ourselves (நாங்களேதான்) |
| They (அவர்கள்) | Themselves (அவர்களேதான்) |

மறுபெயர்ச் சொற்களுடன் "Self" அல்லது "Selves" சேர்ப்பதால். அவை Reflexive Pronouns அக மாறுவதைக் கவனிக்கவும்.

Exercise-பயிற்சி:

ஒரு ஆங்கிலப் பாடபுத்தகத்தை எடுத்து அதிலுள்ள இருபது Reflexive Pronouns களைக் கண்டுபிடித்து எழுதவும்.

# 10. ADJECTIVE - உரிச்சொல்

ஒரு Noun னை வர்ணிக்கும் சொல்லுக்கு Adjective (உரிச்சொல்) எனப் பெயர்.

உதாரணம்:

1. Krishnan is a good boy.

கிருஷ்ணன் ஒரு நல்ல சிறுவன்.

இதில் Krishnan எனும் Noun ஐ good எனும் Adjective வர்ணிக்கின்றது, கிருஷ்ணன் எப்படிப்பட்ட சிறுவன்? எனும் கேள்விக்கு "நல்ல சிறுவன்" எனும் பதில் கிடைக்கின்றது. good (நல்ல) எனும் சொல் Adjective எனப்படும்.

மேலும் உதாரணங்கள்:-

1. Sarasu is a beautiful girl

சரசு ஒரு அழகான பெண்.

2. I saw a white horse

நான் ஒரு வெள்ளை குதிரையைக் கண்டேன்.

மேற்கூறிய வாக்கியங்களில் beautiful (அழகான) white (வெள்ளை) ஆகிய சொற்கள் Adjective (உரிச்சொற்கள்) ஆகும்.

## KINDS OF ADJECTIVES

### உரிச் சொற்களின் வகைகள்

1. Adjective of Quality

(குணத்தை வர்ணிக்கும் உரிச் சொற்கள்)

1. Coimbatore is a large city
கோயமுத்தூர் ஒரு பெரிய நகரம்

2. John is a foolish boy
ஜான் ஒரு பெரிய மடத்தனமுள்ள சிறுவன்

மேற்கூறிய வாக்கியங்களில் large (பெரிய) foolish (மடத்தனமுள்ள) ஆகிய சொற்கள் பெயர்ச் சொற்களான Coimbatore John ஆகியவற்றை வர்ணிக்கின்றன. இவை Adjective of Quality என அழைக்கப்படும்.

2. Adjective of Quantity

(அளவை குறிக்கும் உரிச்சொற்கள்)

1. Balan ate some fruits
பாலன் சில பழங்களைத் தின்றான்.

2. Sivan has much knowledge
சிவன் அதிக அறிவைப் பெற்றிருக்கிறான்.

மேற்கூறியவற்றில் some (சில) much (அதிக) ஆகிய சொற்கள் அளவைக் குறிக்கின்றன. இவை Adjectives of Quantity எனப்படும்.

little (குறைவான) sufficient (போதுமான) whole (முழுமையான) half (அரைப்பாகம்) all (எல்லாம்) ஆகிய சொற்களும் Adjectives of Quantity யின் வகையைச் சேர்ந்தவையாகும். இவற்றை நினைவுபடுத்திக்கொள்ளவும்.

## 3. ADJECTIVES OF NUMBER

(எண்ணிக்கை காட்டும் உரிச்சொற்கள்)

1. I have many balls
என்னிடம் அநேக பந்துகள் உள்ளன.

2. There are two trees.
அங்கு இரண்டு மரங்கள் உள்ளன.

3. Each boy was given a book.
ஒவ்வொரு பையனுக்கும் ஒரு புத்தகம் அளிக்கப்பட்டது.

மேற்கூறியவற்றில் many (அநேக) two (இரண்டு) each (ஒவ்வொரு) எனும் சொற்கள் எண்ணிக்கையைக் காட்டுகின்றன. இவை Adjectives of Number எனப்படும்.

## 4. DEMONSTRATIVE ADJECTIVES

குறிப்பாக சுட்டிக்காட்டும் உரிச்சொற்கள்

1. This pen is a good pen
இந்தப் பேனா ஒரு நல்ல பேனாவாகும்.
2. That tree is a big tree
அந்த மரம் ஒரு பெரிய மரமாகும்;
3. Raman dislikes such stories
ராமன் அத்தகைய கதைகளை வெறுக்கின்றான்.

மேற்கூறியவற்றில் This (இந்த) That (அந்த) Such (அத்தகைய) ஆகிய சொற்கள் குறிப்பாக ஒரு பொருளை சுட்டிக் காட்டுகின்றன. இவை **Demonstrative Adjectives** எனப்படும்.

## 5. INTERROGATIVE ADJECTIVES

(வினா உரிச்சொற்கள்)

1. What is your name?
உன் பெயர் என்ன?
2. which is your pen?
உன் பேனா எது?
3. whose book is this?
இது யாருடைய புத்தகம்?

மேற்கூறியவற்றில் what - என்ன
which - எது
whose - யாருடையது
எனும் சொற்கள் வினாக்களாக அமைகின்றன.
இவை Interrogative Adjectives எனப்படும்.

## 6. EMPHASIZING ADJECTIVES
தெளிவாகக்கூறும் உரிச்சொற்கள்

a. Balan spent his own money
பாலன் தன் சொந்தப் பணத்தைச் செலவழித்தான்.

b. This is the VERY MAN Who stole my pen

இந்த மனிதன்தான் என் பேனாவைத் திருடியவன் மேற்கூறியவற்றில் OWN (சொந்த) VERY MAN (மனிதன் தான்) எனும் சொற்கள் யாருடைய பணம்? எந்த மனிதன் எனும் வினாக்களுக்குத் தெளிவான பதில்களைத் தருகின்றன. இவை Emphasizing Adjectives எனப்படும்.

## 7. EXCLAMATORY ADJECTIVES
வியப்புக்குறிக்கும் உரிச்சொற்கள்

a. what an idea!
எத்தகைய யோசனை!

b. what folly!
என்ன மடத்தனம்!

மேற்கூறியவை Exclamatory Adjectives ஆகும்.

### Formation of Adjectives
(உரிச்சொற்கள் உருவாகும் முறை)

பெயர்ச்சொல் (Noun) வினைச்சொல் (Verb) ஆகியவற்றி லிருந்தும் Adjectives உருவாகின்றன.

உதாரணங்கள்:-

பெயர்ச் சொல்லில் உருவாகும் உரிச்சொற்கள்

| NOUNS | ADJECTVES |
|---|---|
| Child (குழந்தை) | Childish (குழந்தைத் தனமான) |
| Fool (மடையன்) | Foolish (மடமையான) |
| Gold (தங்கம்) | Golden (தங்கமான) |
| Courage (துணிவு) | Courageous (துணிவான) |

வினைச்சொல்லில் உருவாகும் உரிச்சொற்கள்

| VERB | ADJECTIVE |
|---|---|
| Talk (பேசுதல்) | Talkative (ஓயாது பேசும்) |
| Move (நகருதல்) | Movable (நகரத்தக்க) |
| Use (பயன்படுத்தல்) | Useful (பயனுள்ள) |
| Cure (குணப்படுத்தல்) | Curable (குணப்படுத்தத் தக்க) |

சில Adjectives களிலிருந்தும் வேறு Adjectives உருவாக்க வியலும்.

உதாரணம்:-

| ADJECTIVE | ADJECTIVES |
|---|---|
| Three (மூன்று) | Three fold (மும்மடங்கு) |
| Whole (முழுதும்) | Wholesome (முழுமையாக) |
| Tragic (துன்பமான) | Tragical (துன்பமயமான) |
| White (வெண்மை) | Whitish (வெண்மையான) |

## EXERCISE

கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள Adjectives களைக் கண்டறிந்து எவை எவ்வகையைச் சேர்ந்தவை என எழுதவும்.

1. Hari is a lazy boy
   ஹரி ஒரு சோம்பலான பையன்
2. Trichy is a big city
   திருச்சி ஒரு பெரிய நகரம்
3. I will bring some books
   நான் சில புத்தகங்களைக் கொண்டு வருவேன்.
4. He has Ten Rupees
   அவன் பத்துரூபாய்களை வைத்திருக்கிறான்.
5. This shirt is costly
   இந்த சட்டை விலை உயர்ந்தது
6. Which is my pen?
   என்னுடைய பேனா எது?
7. He is the boy who won the race
   இந்தச் சிறுவன்தான் பந்தயத்தில் வெற்றி பெற்றவன்
8. What a genius?
   என்ன ஒரு மேதை!

9. Sita sings many songs
சீதா நிறையப் பாடல்களைப் பாடுகிறாள்.

10. Rama has a good Watch
ராமன் ஒரு நல்ல கடிகாரத்தை வைத்துள்ளான்.

# ADJECTIVES
# DEGREES OF COMPARISON
# உரிச்சொற்கள் - ஒப்பீட்டளவுகள்

ஆங்கில மொழியில் Adjectives (உரிச்சொற்கள்) மூன்று அளவு களில் ஒப்பிடப்படுகிறது. அவையாவன:

1. Positive Degree — நிலை அளவு
2. Comparative Degree — ஒப்பீட்டு அளவு
3. Superlative Degree — உயர் நிலை அளவு

கீழ்க்கண்ட உதாரணங்களைக் கவனிக்கவும்

### POSITIVE DEGREE–நிலைஅளவு

1. Ravi is a <u>short</u> boy
ரவி ஒரு குள்ளமான சிறுவன்

### COMPARATIVE DEGREE – ஒப்பீட்டளவு

2. Ravi is shorter than mani
ரவி மணியைக்காட்டிலும் குள்ளமானவன்

### SUPERLATIVE DEGREE – உயர்நிலை அளவு

3. Ravi is the shortest boy in the class
வகுப்பில் ரவிதான் குள்ளமான சிறுவன்.

குறிப்பு:-

முதல் வாக்கியத்தில் "ரவி குள்ளமானவன்" எனும் நிலையோடு வாக்கியம் முடிகிறது" இதில் உரிச்சொல் 'short' என்பதாகும்.

இரண்டாம் வாக்கியத்தில் 'ரவி மணியைக்காட்டிலும் குள்ள மானவன்' என்று இருவரிடையே ஒப்பீடு செய்யப்படுகிறது. இதில் 'Than' எனும் சொல் காட்டிலும்' எனும் பொருள் கொண்டது ஆகும். "Than mani" எனில் 'மணியைக்காட்டிலும்

எனப்பொருளாகும் இதில் உரிச்சொல்லான 'Short, உடன் "er"எனும் இரு எழுத்துக்கள் சேர்ந்து 'Shorter', என உரிச் சொல் மாறுகிறது.

மூன்றாம் வாக்கியத்தில் 'வகுப்பில் ரவிதான் மிகக்குள்ளமான சிறுவன்" என்பது ஐயத்துக்கு இடமின்றி விளக்கப்படுகிறது. இது Superlative Degree-உயர்நிலை அளவாகும். "The shortest boy"-மிகக்குள்ளமான சிறுவன் எனக்கூறும் போது அவனைக் காட்டிலும் வகுப்பில் குள்ளமானவன் யாருமில்லை என்பது விளங்குகிறது. இதில் "short" எனும் உரிச் சொல்லுடன் "est" எனும் மூன்று எழுத்துக்கள் சேர்ந்து உரிச் சொல்லானது 'shortest' என மாறுகிறது.

ER, "EST" சேர்ந்து உருவாகும் சில Adjectives களைக்காண்க:

| POSITIVE Degree (நிலை அளவு) | COMPARATIVE Degree (ஒப்பீட்டு அளவு) | SUPERLATIVE Degree (உயர் நிலை அளவு) |
|---|---|---|
| Tall (உயரமான) | Taller | Tallest |
| Happy (மகிழ்ச்சியான) | Happier | Happiest |
| Hot (சூடான) | Hotter | Hottest |
| Strong (வலிமையான) | Stronger | Strongest |
| Brave (வீரமான) | Braver | Bravest |

சில உரிச் சொற்கள் மூன்று நிலைகளிலும் புதிய சொற்களாக மாறுவதுண்டு.

உதாரணம்:-

| | | |
|---|---|---|
| Bad (கெட்ட) | Worse | Worst |
| Little (குறைவான) | Less | Least |
| Good (நல்ல) | Better | Best |
| much (அதிக) | more | most |

சில உரிச்சொற்கள் more, most ஆகிய இரு சொற்களைக் கொண்டு Comparative Degree, Superlative Degree களில் வருவதுண்டு.

உதாரணம்:-

| Postive Degree | Comparative Degree | Superlative Degree |
|---|---|---|
| Dangerous (அபாயமான) | more Dangerous | most Dangerous |
| Useful (பயனுள்ள) | more useful | most useful |
| Difficult (கடினமான) | more difficult | most difficult |
| Beautiful (அழகான) | more beautiful | most beautiful |

ஒவ்வொரு வகைக்கும் உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன அவற்றை நன்கு மனப்பாடம் செய்துகொள்ளவும்.

உதாரணம் 1

POSITIVE DEGREE — நிலை அளவு

a. Kasi is a bad boy
காசி ஒரு கெட்ட பையன்

COMPARATIVE DEGREE - ஒப்பீட்டளவு

b. Kasi is worse than Mani
காசி மணியைக் காட்டிலும் கெட்டவன்

SUPERLATIVE DEGREE — உயர்நிலை அளவு

c. Kasi is the worst boy of all
காசிதான் எல்லாரையும் விட மிகக்கெட்ட பையன்

உதாரணம் 2

POSITIVE DEGREE

a. This pen is useful
இந்தப் பேனா பயனுள்ளது

COMPARATIVE DEGREE

b. This pen is more useful than that pen
இந்தப் பேனா அந்தப் பேனாவை விட அதிகப்பயனுள்ளது

c. This pen is the most useful of all pens
எல்லாப் பேனாக்களையும் விட இந்தப்பேனாதான் மிக அதிகப் பயன் உள்ளது.

மேற்கூறிய உதாரணங்களில் உரிச்சொற்கள் மூன்று நிலைகளி லும் வெவ்வேறு சொற்களாக வருவதை உதாரணம் – 1 விளக்குகிறது'

More Most - ஆகிய சொற்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது உதாரணம் - 2 இல் விளக்கப்பட்டுள்ளது. இச் சொற்களை நாம் பயன்படுத்தும் போது உரிச்சொல்லான useful மாறாமல் more useful most useful என வருவதைக் கவனிக்கவும். more, most சொற்களைப் பயன்படுத்தும் நிலைகளில் Adjective மாறா தென்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும். ஆங்கில அகராதி, இலக்கணப் புத்தகங்களில் இதைப்போன்ற வேறு சில சொற்களும் உள்ளன. அவற்றை மனப்பாடம் செய்து கொள்ளவும். ஆங்கில மொழி இலக்கண விவரங்களை நாம் நன்கு மனப்பாடம் செய்தல் மிகவும் அவசியம்.

EXERCISE

ஒரு ஆங்கிலப் பாடப்புத்தகத்தை எடுத்து அதிலுள்ள இத்தகைய வாக்கியங்களை வகைக்குப் பத்தாகத் தேர்ந்தெடுத்து நோட்டுக்கில் எழுதவும். விவரங்களை எளிதில் நாம் மனப்பாடம் செய்து கொள்ள இந்த எழுத்துப் பயிற்சி உறுதுணையாக இருக்கும்.

# 11. ARTICLES - சுட்டிடைச் சொற்கள்

ஆங்கில மொழியில் A அல்லது AN (ஒரு) THE (அந்த) ஆகிய மூன்று சொற்களும் Articles (சுட்டிடைச் சொற்கள்) எனப்படும்.

A, AN இரண்டும் Indefinite Articles (குறிக்காத சுட்டிடைச் சொற்கள்) எனவும் THE Definite Articles (குறிக்கும் சுட்டிடைச் சொல்) எனவும் கருதப்படும்.

ஆங்கில உயிரெழுத்துக்களான (vowels) A,E,I,O,U ஆகிய ஐந்து எழுத்துகளை முதல் எழுத்தாகக் கொண்டு எழுதப்படும் சொற்களுககு "An" (ஒரு) எனும் சுட்டிடைச் சொல்லைப் பயன் படுத்தவேண்டும்.

உதாரணம் - 1

| | |
|---|---|
| An Apple | An Orange |
| An egg | An umbrella |
| An ink - bottle | |

மற்ற சொற்களுக்கு "A" (ஒரு) என்பதைப் பயன்படுத்தலாம்.
உதாரணம் : A shirt, A ball, A pen, A dog, A cat.

உதாரண வாக்கியங்கள்:-

1. He buys an egg
(அவன் ஒரு முட்டையை வாங்குகிறான்)
2. I tell a story
நான் ஒரு கதையைச் சொல்லுகிறேன்.
3. He eats an apple
அவன் ஒரு ஆப்பிளை உண்கிறான்.
4. Vasu makes a box
வாசு ஒரு பெட்டியைச் செய்கிறான்.
5. This is an ink-bottle
இது ஒரு மைக்குப்பி
6. John sings a song
ஜான் ஒரு பாட்டைப் பாடுகிறான்.

உதாரணம்: 2

1. I saw a man and the man was very tall.
நான் ஒரு மனிதனைப் பார்த்தேன் அந்த மனிதன் மிக உயரமாக இருந்தான்.

வாக்கியத்தின் முதல்பகுதியில் உள்ள A man (ஒருமனிதன்) அடுத்த பகுதியில் The man (அந்த மனிதன்) என்று மாறி, குறிப்பாக அந்த மனிதனைச் சுட்டிக் காட்டும் சொல்லாக 'THE' பயன்படுகிறது. எனவே இதனை Definite Article என்பர்.

## EXERCISE

தக்க Articles ஐக் கோடுகளில் நிரப்பவும்

1. I met a boy and......boy was clever
நான் ஒரு சிறுவனைச் சந்தித்தேன்—பையன் புத்திசாலியாக இருந்தான்.
2. He bought......shirt and ......shirt was beautiful,
அவன்—சட்டையை வாங்கினான்—சட்டை அழகாக இருந்தது.
3. We want to......park and......park was large.
நாம்—பூங்காவிற்குச் சென்றோம்—பூங்கா பெரிதாக இருந்தது
4. He has......umbrella.
அவனிடம்—குடை உள்ளது.

5. Mani eats......apple
மணி—அப்பிளை உண்கிறான்.
6. We entered into......house
நாம்—வீட்டினுள் நுழைந்தோம்
7. Kasi has .....cat
காசியிடம்—பூனை உள்ளது.
8. John picks..... stone
ஜான்—கல்லைப் பொறுக்குகிறான்
9. Sarada cleans .... room
சாரதா—அறையைச் சுத்தம் செய்கிறாள்

# 12. VERB - வினைச்சொல்

ஒரு வாக்கியத்தில் செயலைக்குறிக்கும் சொல் VERB (வினைச் சொல்) எனப்படும். கீழ் வரும் உதாரணங்களைக் கவனிக்கவும்.

1. Parvathi cleaned the box
பார்வதி பெட்டியைச் சுத்தம் செய்தாள்
2. Somu came there
சோமு அங்கே வந்தான்.

மேற்கூறிய வாக்கியங்களில் cleaned (சுத்தம் செய்தாள்) came (வந்தான்) என்னும் சொற்கள் செயல்களைக் குறிக்கின்றன. இவைகளை verb - (வினைச்சொல்) என்பர்.

# ADVERB - வினை உரிச்சொல்

Adverb (வினை உரிச்சொல்) என்பது ஒரு (Verb) வினைச்சொல்லை யோ, அல்லது ஒரு (Adjective) உரிச்சொல்லையோ, அல்லது வேறொரு (Adverb) வினை உரிச்சொல்லையோ வர்ணிக்கும் ஒரு சொல்லாகும்,

உதாரணங்கள் :-

1. Rama talks slowly
இராமன் மெதுவாகப் பேசுகிறான்.

மேலேயுள்ள வாக்கியத்தில் slowly (மெதுவாக) எனும் சொல் talks (பேசுகிறான்) என்னும் verb (வினைச்சொல்) ஐ வர்ணிக்கின்றது. இது Adverb ஆகும்.

2. This apple is very sweet
இந்த ஆப்பிள் மிகவும் ருசியாக உள்ளது.
இவ்வாக்கியத்தில் Sweet (ருசியாக) எனும் Adjective (உரிச்சொல்லை) Very (மிகவும்) எனும் "Adverb" வர்ணிக்கின்றது.

3. This bus runs very silently.
இந்தப் பேருந்து மிகவும் நிசப்தமாக ஓடுகிறது.
இந்த வாக்கியத்தில் Silently (நிசப்தமாக) எனும் Adverbஐ Very (மிகவும்) எனும் "Adverb" வர்ணிக்கின்றது.

எனவே ஒரு Adverb ஆனது ஒரு Verb பையோ, Adjective வையோ Adverb ஐயோ வர்ணிக்கும் சொல்லாக இருக்கும்,

## EXERCISE

கீழுள்ள வாக்கியங்களில் Adverb களைக் கண்டறிந்து எழுதவும்.

1. Balan fought bravely.
பாலன் வீரமாகச் சண்டையிட்டான்.
2. This room is very derty.
இந்த அறை மிகவும் அசுத்தமாக உள்ளது.
3. This horse runs very slowly.
இந்தக் குதிரை மிகவும் மெதுவாக ஓடுகிறது.
4. The boy writes neatly,
அந்தச் சிறுவன் சுத்தமாக எழுதுகிறான்.
5. That pen is costly.
அந்தப் பேனா விலை உயர்ந்தது.
6. That man walks very fastly
அந்த மனிதன் மிகவும் வேகமாக நடக்கிறான்.
7. Sarada reads carefully
சாரதா கவனமாகப் படிக்கிறாள்.
8. John works hardly
ஜான் கடினமாக வேலை செய்கிறான்.
9. Sita sings very sweetly
சீதா மிக இனிமையாகப் பாடுகிறாள்.
10. Thevan is very lazy
தேவன் மிகச் சோம்பலாக இருக்கிறான்.

# 13. INFINITIVES
# (முடிவுறா வினைச் சொற்கள்)

கீழ்வரும் உதாரணங்களைப் படிக்கவும்

1. I went to Ravi's house
   நான் ரவியின் வீட்டுக்குச் சென்றேன்.
2. I wished to give him a book.
   அவனுக்கு நான் ஒரு புத்தகத்தை அளிக்க விரும்பினேன்.
3. I went to Ravi's house to give him a book.
   நான் ரவியின் வீட்டுக்கு ஒரு புத்தகத்தை அவனுக்கு அளிக்கச் சென்றேன்.

மேற்கூறிய வாக்கியங்களின் முதலாவது வாக்கியத்தையும் இரண்டாவது வாக்கியத்தையும் சேர்த்து ஒரே வாக்கியமாக மூன்றாவது வாக்கியத்தில் எழுதப்பட்டுள்ளது.

இச் செயலை "To give" (அளிக்க எனும் Infinitive (முடிவுறா வினைச் சொல்) செய்கிறது.

Give - என்றால் அளித்தல் என்று பொருள்

to give - என்றால் அளிக்க என்று பொருள் ஆகும்.

இதை infinitive (முடிவுறா வினைச் சொல்) என்பர்.

நிகழ்கால வினைச் சொல்லின் முன் "to" எனும் சொல்லைச் சேர்த்தால் அது infinitive ஆகும்.

உதாரணம்

| VERB | INFINITIVE | VERB | INFINITIVE |
|---|---|---|---|
| Take | to take | make | to make |
| Wash | to wash | sing | to sing |
| Walk | to walk | look | to look |

உதாரண வாக்கியங்கள்:

1. I want to take this book
   நான் இந்தப் புத்தகத்தை எடுக்க விரும்புகிறேன்.
2. He plans to make a box
   அவன் ஒரு பெட்டியைச் செய்யத் திட்டமிடுகிறான்.

3. She wants to wash her dresses
அவள் அவளுடைய துணிகளைத் துவைக்க விரும்புகிறாள்.
4. Sarasu wishes to sing a song
சரசு ஒரு பாட்டுப்பாட விரும்புகிறாள்.
5. We want to walk two kilometters
நாம் இரண்டு கிலோ மீட்டர் நடக்க விரும்புகிறோம்.
6. You want to look into this box
நீ இந்தப் பெட்டிக்குள் பார்க்க விரும்புகிறாய்.

EXERCISE

கீழ்வரும் இரட்டை வாக்கியங்களை Infinitive ஐப் பயன்படுத்தி ஒரே வாக்கியமாக முதல் உதாரணத்தில் உள்ளது போல் மாற்றவும்.

1. We bought apples. We like to eat them.
2. He planted trees. He wanted to get fruits.
3. They went to Madurai They wanted to see the big temple.
4. She studies hard. She wants to pass the examination.
5. Leela will come today. She wants to meet sarasu.
6. Ahmed brings Pencils. He wants to give them to us
7. You read English. you want to learn it well.
8. She goes to her house. She wants to help her mother.
9. Kasi draws a picture. He wants to give it to me.

# 14. PARTICIPLE
## வினைவழிப்பெயரெச்சம்

ஒரு நிகழ்கால வினைச் சொல்லுடன் (verb-presentcase "ing" எனும் எழுத்துக்களைச் சேர்த்து அதனைப் Participle (வினைவழிப் பெயரெச்சம்) ஆக நாம் பயன்படுத்தலாம்.

உதாரணம்:

Calling the dog, John went outside.
நாயைக் கூப்பிட்டவாறே ஜான் வெளியே சென்றான்.

மேற்கூறிய வாக்கியத்தில் Call (கூப்பிடுதல்) எனும் வினைச் சொல்லில் இருந்து Calling (கூப்பிட்டவாறே) எனும Participle (வினைவழிப் பெயரெச்சம்) உருவாகியுள்ளது Calling எனும் சொல் John எனும் எழுவாய் (Subject) யின் செயலைப் பற்றி விவரிக்கிறது. இதைப் Participle என்பர்.

மேலும் உதாரணங்கள்:

1. Seeing my brother. I ran to him.
   என் சகோதரனைக் கண்டு நான் அவனிடம் ஓடினேன்.
2. Having made a bench the carpenter went away
   ஒரு பெஞ்சை செய்துவிட்டு அந்தத் தச்சன் வெளியே சென்றான்.
3. Hearing the noise, Vasu went outside
   அந்த ஒலியைக் கேட்டு வாசு வெளியே சென்றான்.

குறிப்பு: முதல் வாக்கியத்தில் Seeing (கண்டு) எனும்சொல் I எனும் Subject (எழுவாயின்) செயலைத் தழுவுகிறது. இரண்டாம் வாக்கியத்தில் Having made (செய்துவிட்டு) எனும் சொல் Carpenter எனும் Subjectன் செயலைத் தழுவுகிறது.

மூன்றாம் வாக்கியத்தில் Hearing (கேட்டு) எனும் சொல் Vasu எனும் Subjectன் செயலைப்பற்றிக் குறிக்கின்றது.

இத்தகைய வாக்கியங்களிலுள்ள seeing, having, made, hearing எனும் சொற்கள் Participles (வினைவழிப்பெயரெச்சங்கள்) என ஆங்கில இலக்கணத்தில் கூறப்படும்.

தவிர இவை முடிவுறா வினைச்சொற்களாக (கண்டு, செய்து, விட்டு, கேட்டு) இருப்பதைக் கவனிக்கவும். ஏனெனில் இவை வர்ணிக்கும் சொற்களில் செயல் முடிவதில்லை.

உதாரணம்:

seeing (கண்டு) எனும் சொல் தொடர்வினைச் சொல்லாக உள்ளது. அதில் செயல் முடிவு பெறவில்லை.

இவ்வாறே மற்ற சொற்களும் உள்ளதை நன்கு கவனிக்கவும். தவிர Participle "ing" எழுத்துக்களை நிகழ்கால வினைச்சொல்லுடன்சேர்ப்பதால் உண்டாகிறதென்பதையும், அது ஒரு முடிவுறா வினைச் சொல்லாகத்தான் இருக்கும் என்பதையும் நன்கு நினைவில் வைத்துக்கொள்ளவும்.

## EXERCISE

ஏதாவதொரு ஆங்கிலப்புத்தகத்தை எடுத்து, இத்தகைய Participles அடங்கிய வாக்கியங்கள் இருபதை எடுத்து நோட்டில் எழுதிப் பயிற்சி புரியவும். தவறவேண்டாம்.

# 15. GERUND - தொழிற்பெயர்

ஆங்கில மொழியில் GERUND (தொழிற்பெயர்) என்பதும் Participle (வினைப் பெயரெச்சம்) ஐப்போலவே Present Tense verbவுடன் (நிகழ்கால வினைச்சொல்) "ING" எனும் எழுத்துகள் சேர்த்து எழுதப்படும் சொல்லாகும்.

உதாரணம்:

Walking (நடத்தல்) talking (பேசுதல்) Washing (துவைத்தல்) Singing (பாடுதல்) ஆகியன. ஆனால் Participleக்கும், Gerundக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது.

1. Participle வாக்கியத்திலுள்ள Subject (எழுவாய்) யின் செயலை விவரித்து எழுவாயுடன் இணைந்திருக்கும்.
2. ஆனால் Gerund ஆனது அதுவே வாக்கியத்தின் Subject (எழுவாய்) ஆகவோ அல்லது Object (செயப்படுபொருள்) ஆகவோ வாக்கியத்தில் அமைந்திருக்கும்.
3. இது தான் Participle க்கும் Gerund க்கும் உள்ள முக்கிய வேறுபாடு.

உதாரணம்:

1. Walking is a good physical exercise.
நடத்தல் ஒரு நல்ல தேகப் பயிற்சியாகும்.
மேற்கூறிய வாக்கியத்தில் Subject (எழுவாய்) எது?

Walking (நடத்தல்) என்பதே Subject (எழுவாய்) ஆகும். எனவே இது ஒரு Gerund ஆகும். participle அல்ல.

2. Sarada likes Singing songs.
சாரதா பாட்டுகள் பாடுவதை விரும்புகிறாள்

இவ்வாக்கியத்தில் Subject (எழுவாய்) எது?
Sarada என்பது இவ்வாக்கியத்தின் Subject (எழுவாய்) ஆகும்.
ஆனால் Object (செயப்படு பொருள்) எது?
Singing Songs (பாட்டுப் பாடுவது) Object (செயப்படுபொருள்) ஆகும். எனவே Singing ஒரு Gerund ஆகும்.

மேலும் சில உதாரணங்கள்.

1. Reading is a good pastime.
படித்தல் ஒரு நல்ல பொழுது போக்காகும்.

2. Ravi likes playing chess.
ரவி சதுரங்கம் விளையாடுவதை விரும்புகிறான்.
3. Swimming is good for health.
நீந்துதல் உடல் ஆரோக்கியதத்துக்கு நல்லது.

EXERCISE

ஒரு ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து அதில் Gerunds அடங்கிய வாக்கியங்கள் இருபதினைப் பொறுக்கி எடுத்து நோட்புக்கில் எழுதவும். இவ்வாறு செய்தல் ஆங்கில இலக்கண அமைப்பினை அறிய மிகவும் உதவும்,

# 16. TENSE - காலம்

வினைச்சொல்லை (VERB) மூன்று காலங்களாகப் பிரிக்கலாம். அவை

| | |
|---|---|
| 1. நிகழ்காலம் | (Present tense) |
| 2. இறந்தகாலம் | (Past tense) |
| 3. எதிர்காலம் | (Future tense) |

கீழேகண்ட உதாரணங்களைப் படிக்கவும்

1. John bites a bread (Present tense)
ஜான் ஒரு ரொட்டியைக் கடிக்கிறான்
2. John bit a bread (Past tense)
ஜான் ஒரு ரொட்டியைக் கடித்தான்
3. John will bite a bread
or
John shall bite a bread
} (Future tense)

ஜான் ஒரு ரொட்டியைக் கடிப்பான்

குறிப்பு: ஆங்கில மொழியில் எதிர் காலத்தைக் குறிக்க Will அல்லது Shall எனும் இரு சொற்களில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

மேற்கூறியவற்றில் வாக்கியம் 1-இல் Bites (கடிக்கிறான்) எனும் சொல் Present tense எனவும்

வாக்கியம் 2-இல் உள்ள (Bit) கடித்தான் எனும் சொல் Past tense எனவும்

வாக்கியம் 3-இல் உள்ள will bite அல்லது shall bite (கடிப்பான்) எனும் சொல் future tense எனவும் ஆங்கில மொழியில் அழைக்கப் படும்,

குறிப்பு : நிகழ்கால verb உடன் Will அல்லது Shallயை அதன்முன் எழுதினால், அது Future tense ஆக மாறும், இதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.

ஆங்கில மொழியில் வினைச் சொல்லை 3 காலங்களாக எழுதலாம் அவை 1. Present tense (நிகழ்காலம்) 2. Past tense (இறந்த காலம்) 3. Past Participle tense (வினை முற்று இறந்தகாலம்) ஆகியவையாகும.

குறிப்பு: Future Tense ஐ ஆங்கில மொழியில் எழுதுவது கிடையாது. அதற்குப் பதிலாக Past participle Tenseஐ (வினைமுற்று இறந்தகாலம்) எழுதுவர் Has made, have made, had made ஆகியவை உதாரணங்கள் ஆகும். Future Tense வினைச் சொற்களை உண்டாக்க நிகழ்கால வினைச்சொல்லுடன் Will அல்லது Shall எனும் சொல்லை முன்னால் எழுதினால் போதும் என்பது ஆங்கில இலக்கணவிதியாகும். Has, Have, Had எனும் சொற்களில் ஏதாவது ஒன்று அது Verb க்கு (வினைச்சொல்லுக்கு) முன் வருமானால் Past Participle Tense ஆகும்.

இனி ஆங்கிலமொழியில் உள்ள சில வினைச்சொற்கள் (Verbs) மூன்று காலங்களிலும் எவ்விதம் மாறிவரும் என்று காண்போம்.

| Present Tense நிகழ்காலம் | Past Tense இறந்தகாலம் | past Participle Tense (வினைமுற்று இறந்த காலம்) Has, Have or Had + Verb |
|---|---|---|
| Ask (கேட்டல்) | Asked | Asked |
| Awake (கண்விழித்தல்) | Awoke | Awaken |
| Abuse (திட்டுதல்) | Abused | Abused |
| Beat (அடித்தல்) | Beat | Beaten |
| Bite (கடித்தல்) | Bit | Bitten |
| Bend (வளைத்தல்) | Bent | Bent |
| Bind (கட்டுதல்) | Bound | Bound |
| Bring (கொண்டு வருதல்) | Brought | Brought |

| | | |
|---|---|---|
| Burn (எரித்தல்) | Burnt | Burnt |
| Cut (வெட்டுதல்) | Cut | Cut |
| Come (வருதல்) | Came | Come |
| Catch (பிடித்தல்) | Caught | Caught |
| Call (கூப்பிடுதல்) | Called | Called |
| Cling (ஒட்டிக் கொள்ளல்) | Clung | Clung |
| Close (மூடுதல்) | Closed | Closed |
| Dance (நாட்டியமாடல்) | Danced | Danced |
| Dig (தோண்டுதல்) | Dug | Dug |
| Damage (நாசமாக்கல்) | Damaged | Damaged |
| Decide (தீர்மானித்தல் | Decided | Decided |
| Decorate (அலங்கரித்தல்) | Decorated | Decorated |
| Enter (நுழைதல்) | Entered | Entered |
| Eat (சாப்பிடுதல்) | Ate | Eaten |
| Examine (சோதித்தல்) | Examined | Examined |
| Execute (செய்து முடித்தல்) | Executed | Executed |
| Fix (பொருத்துதல்) | Fixed | Fixed |
| Fly (பறத்தல்) | Flew | Flown |
| Fight (சண்டையிடல்) | Fought | Fought |
| Find (கண்டுபிடித்தல்) | Found | Found |
| Feel (உணர்தல்) | Felt | Felt |
| Fall (விழுதல்) | Fell | Fallen |
| Forget (மறந்துவிடல்) | Forgot | Forgotten |
| Go (போதல்) | Went | Gone |
| Get (அடைதல்) | Got | Got |
| Grow (வளர்தல்) | Grew | Grown |
| Hit (அடித்தல) | Hit | Hit |
| Help (உதவுதல்) | Helped | Helped |
| Hate (வெறுத்தல்) | Hated | Hated |
| Hide (ஒளிதல) | Hid | Hidden |
| Hold (பிடித்தல்) | Held | Held |
| Hang (தொங்குதல்) | Hung | Hung |
| Hurt (அடிபடுதல்) | Hurt | Hurt |
| Know (அறிதல்) | Knew | Known |
| Keep (வைத்தல்) | Kept | Kept |
| Kick (உதைத்தல்) | Kicked | Kicked |
| Kill (கொல்லுதல்) | Killed | Killed |
| Kneel (மண்டியிடல்) | Knelt | Knelt |
| Live (வசித்தல்) | Lived | Lived |
| Lift (தூக்குதல்) | Lifted | Lifted |

| | | |
|---|---|---|
| Love (நேசித்தல்) | Loved | Loved |
| Let (விடுதல்) | Let | Let |
| Leave (செல்லுதல்) | Left | Left |
| Laugh (சிரித்தல்) | Laughed | Laughed |
| Lie (படுத்தல்) | Lay | Laid |
| Lend (இரவல் அளித்தல்) | Lent | Lent |
| Mix (கலத்தல்) | Mixed | Mixed |
| Make (செய்தல) | Made | Made |
| Meet (சந்தித்தல்) | Met | Met |
| Manage (நிர்வகித்தல்) | Managed | Managed |
| Mar (அழித்தல்) | Marred | Marred |
| Nag (தொல்லையளித்தல்) | Nagged | Nagged |
| Navigate (கப்பல் செலுத்துதல்) | Navigated | Navigated |
| Need (தேவைப்படல்) | Needed | Needed |
| Neglect (உதாசீனம் செய்தல்) | Neglected | Neglected |
| Nibble (மெதுவாக கடித்தல்) | Nibbled | Nibbled |
| Order (உத்தரவிடல்) | Ordered | Ordered |
| Obey (கீழ்ப்படிதல்) | Obeyed | Obeyed |
| Obtein (பெறுதல்) | Obtained | Obtained |
| Offend (வெறுப்புறச் செய்தல்) | Offended | Offended |
| Open (திறத்தல்) | Opened | Opened |
| Pick (பிடுங்குதல்) | Picked | Picked |
| Pacify (சமாதானப்படுத்தல்) | Pacified | Pacified |
| Paint (வர்ணந்திட்டல்) | Painted | Painted |
| Peel (உரித்தல்) | Peeled | Peeled |
| Pour (கொட்டுதல்) | Poured | Poured |
| Put (வைத்தல்) | Put | Put |
| Quake (நடுங்குதல்) | Quaked | Quaked |
| Quarrel (சண்டையிடல்) | Quarrelled | Quarrelled |
| Quit (வெளியேறல்) | Quitted | Quitted |
| Ring (மணி ஒலித்தல்) | Rang | Rung |
| Run (ஓடுதல்) | Ran | Run |
| Ravage (நாசப்படுத்துதல்) | Ravaged | Ravaged |
| Read (படித்நல்) | Read | Read |
| Rebel (எதிர்த்தல்) | Rebelled | Rebelled |
| Receive (பெறுதல்) | Received | Received |
| Ride (சவாரிசெய்தல்) | Rode | Ridden |
| Say (சொல்லுதல்) | Said | Said |
| Set (வைத்தல்) | Set | Set |

| | | |
|---|---|---|
| Shine (பிரகாசித்தல்) | Shone | Shone |
| Shut (மூடுதல்) | Shut | Shut |
| Sit (உட்காருதல்) | Sat | Sat |
| Spread (பரவுதல்) | Spread | Spread |
| Sink (மூழ்குதல்) | Sunk | Sunk |
| Sing (பாடுதல்) | Sang | Sung |
| Shake (அசைத்தல்) | Shook | Shaken |
| Show (காட்டுதல்) | Showed | Showed |
| Speak (பேசுதல்) | Spoke | Spoken |
| Steal (திருடுதல்) | Stole | Stolen |
| Swim (நீந்துதல்) | Swam | Swum |
| See (பார்த்தல்) | Saw | Seen |
| Take (எடுத்தல்) | Took | Taken |
| Tear (கிழித்தல்) | Tore | Torn |
| Tell (சொல்லுதல்) | Told | Told |
| Teach (போதித்தல்) | Taught | Taught |
| Test (சோதித்தல்) | Tested | Tested |
| Unite (ஒற்றுமைப்படுத்தல்) | United | United |
   நான் பூனைகளை நேசிக்கிறேன்

மேற்கூறியுள்ள ஒவ்வொரு வாக்கியத்திற்கும் ஒவ்வொரு காலத்திற்கும் 6 வாக்கியங்கள் அமைக்க வேண்டும். நான்கு காலங்களுக்கும் சேர்த்து ஒவ்வொரு வாக்கியத்திற்கும் 24 வாக்கியங்கள் எழுதவும் இவ்வாறு Present Tense, Past Tense, Future Tense ஆகிய 3 காலங்களுக்கும் வாக்கியங்கள் எழுதவும். அடுத்து செயற்பாட்டுவினை வாக்கியங்களை கவனிப்போம்.

# 26. PASSIVE VOICE

## செயற்பாட்டுவினை

### 8 காலங்கள்

Active Voice 12 காலங்களில் வாக்கியங்கள் அமைக்கலாம் என்பதை அறிவோம். ஆனால் Passive Voiceஇல் 8 காலங்களில் தான் வாக்கியங்கள் அமைக்க முடியும். அவற்றைக் காண்போம். I Person *(தன்னிலை)* II Person *(முன்னிலை)* III Person *(படர்க்கை)* ஆகிய மூன்றிலும் வாக்கியங்கள் உள்ளன. அவற்றை கவனத்துடன் படிக்கவும்.

## 1. PRESENT TENSE — PASSIVE VOICE

நிகழ்காலம் — செயப்பாட்டுவினை (3 காலங்கள்)

I Person (தன்னிலை)

Fruits are eaten by me
பழங்கள் என்னால் உண்ணப்படுகின்றன

Fruits are eaten by us
பழங்கள் எங்களால் உண்ணப்படுகின்றன

குறிப்பு: Passive Voiceல் I (நான்) எனும் சொல் "by me" (என்னால் என்றும் We (நாம்) எனும் சொல் "by us" (எங்களால்) என்றும் மாறி வரும். இதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.

II PERSON (முன்னிலை)

Fruits are eaten by you
பழங்கள் உன்னால் உண்ணப்படுகின்றன.

Furits are eaten by you
பழங்கள் உங்களால் உண்ணப்படுகின்றன.

குறிப்பு: மேற்கூறிய வாக்கியங்களில் "You" (நீ) எனும் சொல் "உன்னால்" அல்லது "உங்களால்" என ஒருமைக்கும் பன்மைக்கும் தமிழில் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும் என்பதை கவனிக்கவும்.

III PERSON ((படர்க்கை)

Fruits are eaten by him
பழங்கள் அவனால் உண்ணப்படுகின்றன.

Fruits are eaten by them
பழங்கள் அவர்களால் உண்ணப்படுகின்றன.

குறிப்பு: இவ்வாக்கியங்களில் He (அவன்) என்பது "by him" (அவனால்) எனவும், They என்பது "by them" (அவர்களால்) எனவும் மாறியுள்ளதை கவனிக்கவும்.

தன்னிலை, முன்னிலை, படர்க்கை, ஆகிய மூன்று இடங்களுக்கும் "are eaten" (உண்ணப்படுகின்றன) எனும் வினைச்சொல்லே எல்லா வாக்கியங்களிலும் வருகிறது. Fruits (பழங்கள்) எனும் செயப்படு

பொருளை (object) வாக்கியத்தில் முதல் சொல்லாக வந்துள்ளதை கவனிக்கவும். Active Voice (செய்வினை) க்கும் Passive Voice (செயப்பாட்டு வினை)க்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடுகளை நன்கு கவனித்து நினைவில் வைத்துக்கொள்ளவும்.

## 2. PRESENT CONTINUOUS TENSE — தொடர் நிகழ்காலம்
## PASSIVE VOICE

I person (தன்னிலை)

Fruits are being eaten by me
பழங்கள் என்னால் உண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

Fruits are being eaten by us
பழங்கள் எங்களால் உண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பு: வினைச்சொல் "are being eaten" என மாறியுள்ளதை கவனிக்கவும்.

II person – (முன்னிலை)

Fruits are being eaten by you
பழங்கள் உன்னால் உண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

Fruits are being eaten by you
பழங்கள் உங்களால் உண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பு: ஒருமைக்கும், பன்மைக்கும் "You" எனும் ஒரே சொல் பயன்படும் என்பதை முன்பே படித்துள்ளீர்கள், அதை நினைவில் வைத்துக் கொள்ளவும். "are being eaten" வினைச் சொல்லாகும்.

III PERSON (படர்க்கை)

Fruits are being eaten by him.
பழங்கள் அவனால் உண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

Fruits are being eaten by them
பழங்கள் அவர்களால் உண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பு: வினைச்சொல் "are being eaten" என வந்துள்ளதை கவனிக்கவும்.

## 3. PRESENT PERFECT TENSE – வினைமுற்று நிகழ்காலம்
## PASSIVE VOICE

I PERSON (தன்னிலை)

Fruits have been eaten by me.
பழங்கள் என்னால் உண்ணப்பட்டன.

Fruits have been eaten by us.
பழங்கள் எங்களால் உண்ணப்பட்டன.

குறிப்பு: வினைச் சொல் "have been eaten" என வந்துள்ளது.

II PERSON (முன்னிலை)

Fruits have been eaten by you.
பழங்கள் உன்னால் உண்ணப்பட்டன.
Fruits have been eaten by you.
பழங்கள் உங்களால் உண்ணப்பட்டன.

குறிப்பு: வினைச் சொல் "have been eaten" என்பதே.

III PERSON (படர்க்கை)

Fruits have been eaten by him.
பழங்கள் அவனால் உண்ணப்பட்டன.
Fruits have been eaten by them.
பழங்கள் அவர்களால் உண்ணப்பட்டன.

குறிப்பு: இதிலும் வினைச்சொல் "have been eaten" என வந்துள்ளது. எனவே Passive Voiceல் Present Tense, Present Continuous Tense, Present Perfect Tense ஆகிய மூன்று காலங்களும் வினைச்சொற்கள் ஒரே மாதிரியாக வந்துள்ளன. மாறுதலில்லை.

ஆனால் I என்பது me யாகவும் we என்பது us ஆகவும் He என்பது him ஆகவும் They என்பது Them ஆகவும் மாறும் ஆனால் You மட்டும் மாறாது.

அடுத்துள்ள Present Perfect Continuous Tenseல் (4வது காலம் அமைக்க முடியாது. நினைவில் வைத்துக்கொள்ளவும். 3 காலங்களில்தான் வாக்கியங்கள் அமைக்க முடியும்.

## 4. PAST TENSE — PASSIVE VOICE (3 Tenses)
## இறந்தகாலம் — செயப்பாட்டு வினை (3 காலங்கள்)

I PERSON (தன்னிலை)

Fruits were eaten by me
பழங்கள் என்னால் உண்ணப்பட்டன;
Fruits were eaten by us
பழங்கள் எங்களால் உண்ணப்பட்டன

II PERSON (முன்னிலை)

Fruits were eaten by you
பழங்கள் உன்னால் உண்ணப்பட்டன
Fruits were eaten by you
பழங்கள் உங்களால் உண்ணப்பட்டன

III PERSON (படர்க்கை)

Fruits were eaten by him
பழங்கள் அவனால் உண்ணப்பட்டன
Fruits were eaten by them
பழங்கள் அவர்களால் உண்ணப்பட்டன.

குறிப்பு: Past tenseல் தன்னிலை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களுக்கும் "were eaten" என்பதே வினைச்சொல்லாக வந்துள்ளதை கவனிக்கவும். மாறுதல் இல்லை.

## 5. PAST CONTINUOUS TENSE — தொடர் இறந்தகாலம் PASSIVE VOICE

I PERSON (தன்னிலை)

Fruits were being eaten by me
பழங்கள் என்னால் உண்ணப்பட்டுக்கொண்டிருந்தன.
Fruits were being eaten by us
பழங்கள் எங்களால் உண்ணப்பட்டுக்கொண்டிருந்தன.

II PERSON (முன்னிலை)

Fruits were being eaten by you
பழங்கள் உன்னால் உண்ணப்பட்டுக் கொண்டிருந்தன.
Fruits were being eaten by you
பழங்கள் உங்களால் உண்ணப்பட்டுக் கொண்டிருந்தன.

III PERSON (படர்க்கை)

Fruits were being eaten by him
பழங்கள் அவனால் உண்ணப்பட்டுக் கொண்டிருந்தன.
Fruits were being eaten by them
பழங்கள் அவர்களால் உண்ணப்பட்டுக் கொண்டிருந்தன.

குறிப்பு: Past Continuous Tenseலும் தன்னிலை, முன்னிலை, படர்க்கை ஆகியவற்றிற்கு "were being eaten" என்பதே வினைச்சொல்லாக வந்துள்ளது. மாறுதலில்லை.

## 6. PAST PERFECT TENSE — வினைமுற்று இறந்தகாலம் PASSIVE VOICE

I PERSON *(தன்னிலை)*

Fruits had been eaten by me
*பழங்கள் என்னால் உண்ணப்பட்டு விட்டன.*
Fruits had been eaten by us
*பழங்கள் எங்களால் உண்ணப்பட்டு விட்டன.*

II PERSON (முன்னிலை)

Fruits had been eaten by you
*பழங்கள் உன்னால் உண்ணப்பட்டு விட்டன.*
Fruits had been eaten by you
*பழங்கள் உங்களால் உண்ணப்பட்டு விட்டன.*

III PERSON *(படர்க்கை)*

Fruits had been eaten by him
*பழங்கள் அவனால் உண்ணப்பட்டு விட்டன.*
Fruits had been eaten by them.
*பழங்கள் அவர்களால் உண்ணப்பட்டுவிட்டன.*

குறிப்பு: Past Perfect Tenseலும் தன்னிலை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களுக்கும் "had been eaten" எனும் வினைச் சொல்லே வருகிறது. மாறுதலில்லை.

Present Tenseயைப் போலவே Past Tenseலும் Past Perfect Continuous Tense க் வாக்கியங்கள் அமைக்க முடியாது எனவே நாலாவது காலம் Passive Voice Past Tenseல் கிடையாது. இருப்பது 3 காலங்கள் மட்டுமே.

## 7. FUTURE TENSE — PASSIVE VOICE *(2 Tenses)*

எதிர்கால — செயப்பாட்டு வினை *(2 காலங்கள்)*

PERSON *(தன்னிலை)*

Fruits shall / will be eaten by me.
*பழங்கள் என்னால் உண்ணப்படும்.*
Fruits shall / will be eaten by us.
*பழங்கள் எங்களால் உண்ணப்படும்.*

குறிப்பு: Shall அல்லது "will be eaten" என்பது வினைச்சொல் லாகும்.

Future Tenseல் Passive Voice வாக்கியங்கள் Future Continuous Tense ல் (தொடர் எதிர்காலம் அமைக்க முடியாது, நினைவில் வைக்கவும்.)

## 8, FUTURE PERFECT TENSE – PASSIVE VOICE
### வினைமுற்று எதிர்காலம் (செயப்பாட்டு வினை)

I PERSON (தன்னிலை)

Fruits shall / will have been eaten by me.
பழங்கள் என்னால் உண்ணப்பட்டிருக்கும்.
Fruits / shall will have been eaten by us.
பழங்கள் எங்களால் உண்ணப்பட்டு இருந்திருக்கும்.

II PERSON (முன்னிலை)

Fruits shall / will have been eaten by you.
பழங்கள் உன்னால் உண்ணப்பட்டு இருந்திருக்கும்.
Fruits shall / will have been eaten by you.
பழங்கள் உங்களால் உண்ணப்பட்டு இருந்திருக்கும்,

III PERSON (படர்க்கை)

Fruits shall / will have been eaten by him.
பழங்கள் அவனால் உண்ணப்பட்டு இருந்திருக்கும்.
Fruits shall / will have been eaten by them.
பழங்கள் அவர்களால் உண்ணப்பட்டு இருந்திருக்கும்.

குறிப்பு: இதில் தன்னிலை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களில் ஒருமைக்கும், பன்மைக்கும் "shall அல்லது will have been eaten" என்பதே வினைச் சொல்லாக வருகிறது. மாறுதலில்லை.

Future Tense ல் Present Continuous Tense லும், Present perfect Continuous Tense லும் ஆக இரண்டு காலங்களில் Passive Voiceல் வாக்கியங்கள் அமைக்க முடியாது. ஆக மொத்தம் 12 காலங்களில் 8 காலங்களுக்குத்தான்.

1. Present Tense 2. Present Continuous Tense 3. Present Perfect Tense 4. Past Tense 5. Past Continuous Tense 6. Past Perfect Tense 7. Future Tense 8. Future Perfect Tense) நாம் Passive Voice ல் வாக்கியங்கள் அமைக்க முடியும் ஆங்கில மொழி இலக்கணத்தில் வினைச் சொல்லுக்கான 12 காலங்களையும், Active Voice, Passive Voice களில் அந்த 12 காலங்களிலும் எவ்வாறு வாக்கியங்கள் அமைப்பதென்பதை யும் இப்பொழுது நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டீர்கள். இதுதான் ஆங்கில மொழி இலக்கணத்தின் அடித்தளம். இதனை நன்றாக நீங்கள் மனப்பாடம் செய்து கொண்டால் தமிழில் கூறும் எந்த வாக்கியத்தையும், தவறின்றி ஆங்கிலத்தில் அதே பொருள் வரும்படியாக மொழி பெயர்க்க இயலும் தவிர மொழி எழுதவும் இயலும்.

எனவே இந்த 12 காலங்களை நன்கு புரிந்து கொள்ள அடிக்கடி செய்துள்ள பயிற்சிகளை எடுத்துப் படித்து மனப்பாடம் செய்வ தோடு, அத்தகைய வாக்கியங்களை மற்ற ஆங்கிலப் புத்தகங் களைப் படித்து கண்டு பிடித்து எழுதி அவற்றின் அர்த்தங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். இத்தகைய பயிற்சிகளை ஆங்கில மொழியை நன்றாகக் கற்றுக் கொள்ள நீங்கள் செய்வது மிகவும் அவசியம். இப்பயிற்சிகள்தான் நீங்கள் ஆங்கிலத்தைத் தவறின்றிக் கற்க உறுதுணையாக இருக்கும். தவிர நீங்கள் கற்றுள்ள 12 காலங்களில் தன்னிலை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களுக்கு எவ்வாறு வினைச் சொற்கள் மாறைப்படுகின்றன, என்பதை அடிக்கடி படித்து மனப்பாடம் செய்துகொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியம்.

அடுத்து நேர்கூற்று (Direct speech அயற்கூற்று (indirect speech) ஆகியவற்றைப் பற்றிக் கற்போம்.

### EXERCISE பயிற்சி (Passive Voice)

கீழ Passive Voiceல் ஒருமை Present Tense வாக்கியங்கள் சில கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாக்கியங்களை Passive Voiceன் 8 காலங்களிலும் எழுதி, அதன் தமிழ்ப் பொருளையும் கீழே எழுதவும்

1. Boxes are made by me
   என்னால் பெட்டிகள் செய்யப்படுகின்றன.
2. Trees are planted by me
   மரங்கள் என்னால் நடப்படுகின்றன.

3. Books are written by me
புத்தகங்கள் என்னால் எழுதப்படுகின்றன.
4. Stones are picked my me
கற்கள் என்னால் பொறுக்கப்படுகின்றன.
5. Pens are brought by me
பேனாக்கள் என்னால் கொண்டுவரப்படுகின்றன.
6. Cycles are repaired by me
சைக்கிள்கள் என்னால் பழுது பார்க்கப்படுகின்றன.
7. Friends are helped by me
நண்பர்கள் என்னால் உதவப்படுகிறார்கள்.
8. Pencils are bought by me
பென்சில்கள் என்னால் வாங்கப்படுகின்றன.
9. Flowers are liked by me
மலர்கள் என்னால் விரும்பப்படுகின்றன.
10. Shirts are washed by me
சட்டைகள் என்னால் துவைக்கப்படுகின்றன.
11. Houses are built by me
வீடுகள் என்னால் கட்டப்படுகின்றன.
12. Doors are Cleaned by me
கதவுகள் என்னால் சுத்தம் செய்யப்படுகின்றன.
13. Pictures are drawn by me
படங்கள் என்னால் வரையப்படுகின்றன.
14. Chairs are counted by me
நாற்காலிகள் என்னால் எண்ணப்படுகின்றன.
15. Lessons are read by me
பாடங்கள் என்னால் படிக்கப்படுகின்றன.

குறிப்பு: மேற்கூறிய வாக்கியங்களை நன்கு கவனிக்கவும். Passive Voice ல் Verbs (வினைச் சொற்கள்) Past Participle (இறந்த கால வினைமுற்று) க்கான வினைச் சொற்களாகத்தான் இருக்கும். எனவே ஒவ்வொரு வினைச் சொல்லுக்குமான Past Partciple Verbஐ நாம் முதலில் அறிந்து, பிறகு பயிற்சியை செய்ய வேண்டும்.

# 27. DIRECT AND INDIRECT SPEECH
# நேர்க்கூற்று அயற்கூற்று

கீழ்க்கண்ட வாக்கியங்களைப் படிக்கவும்

1. Ravi said, "I am going to my house" (Direct Speech)
"நான் என்னுடைய வீட்டுக்குப் போய்க்கொண்டு இருக்கிறேன்." என்று ரவி சொன்னான்.

What did Ravi say?
ரவி என்ன சொன்னான்?

2. Ravi said that "he was going to his house" (Indirect speech)
ரவி அவனுடைய வீட்டுக்கு அவன் போய்க்கொண்டிருப்பதாகச் சொன்னான். (அயற்கூற்று)

முதல் வாக்கியத்தில் ரவி கூறிய சொற்கள் அவன் கூறியபடியே எழுதப்பட்டுள்ளன. இது Direct Speech (நேர்க்கூற்று) ஆகும்.

அடுத்ததாக ரவி என்ன சொன்னான்? எனும் கேள்விக்கு மூன்றாம் நபர் ஒருவர் "ரவி அவனுடைய வீட்டுக்கு அவன் போய்க்கொண்டிருப்பதாக சொன்னான்" என பதில் கூறுகிறார். இது Indirect speech (அயற்கூற்று) ஆகும்.

சுருக்கமாக ஒருவர் கூறிய வாக்கியத்தைப் பற்றி அடுத்தவர் மற்றவர்க்குக் கூறுவது Indirect speech (அயற்கூற்று) ஆகும்.

Direct Speechஐ Indirect Speech ஆக மாற்றும்போது சில புதுச்சொற்கள் சேருகின்றன. அவற்றை முறையாக நாம் கவனித்து மனப்பாடம் செய்துகொள்ள வேண்டும்.

1. Direct Speechல் உள்ள " " அடைப்புக்குறிகள் Indirect Speechல் நீக்கப்பட்டுள்ளன.

2. Indirect Speechல் "that" எனும் இணைப்புச்சொல் புதிதாக சேருகிறது.

3. Present Continuous tenseல் (தொடர் நிகழ்காலம்) உள்ள "I am going to my house" எனும் Direct Speech வாக்கியம் he was going to his house என Past Continuous Tenseல் (தொடர் இறந்த காலம்) Indirect Speechல் மாற்றப்பட்டுள்ளது.

4. அடுத்து "I" எனும் சொல் Heயாகவும், "am going" எனும் சொற்கள் "was going" எனவும், "my" எனும்சொல் his எனவும் Indirect Speech வாக்கியத்தில் மாறியுள்ளது.

கீழ்கண்ட உதாரணத்தை கவனிக்கவும்

1. I said to Rama, "You can go now" (Direct Speech) "நீ இப்பொழுது போகலாம்" என நான் ராமனிடம் சொன்னேன் (நேர்கூற்று)

2. I told Rama that he could go then (Indirect Speech) நான் ராமனிடம் அவன் அப்பொழுதே போகலாமென்று சொன்னேன். (அயற்கூற்று)

இதிலுள்ள மாற்றங்களை நன்கு கவனிக்கவும்.

இவ்வாக்கியத்தில் "said to" எனும் Direct Speech ல் உள்ள சொற்கள் Indirect Speech ல் "told" என ஒரே சொல்லாக மாறுகின்றன. 'told' (சொன்னேன்) எனும் ஒரேசொல் said to எனும் இரு சொற்களின் செயலை செய்கிறது.

Direct Speech லிருந்து Indirect Speechக்கு நாம் வாக்கியங்களை ஆங்கிலத்தில் மாற்றும் போது சில சொற்களையும் மாற்றும் அவசியம் உள்ளது. கீழ்க்கண்ட பட்டியலை நன்கு மனப்பாடம் செய்து கொள்ளவும்.

| Direct Speech (நேர்கூற்று) | | Indirect Speech (அயற்கூற்று) | |
|---|---|---|---|
| Now (இப்பொழுது) எனும்சொல் | | Then (அப்பொழுது) எனமாறும் | |
| This (இது) | ,, | That (அது) | ,, |
| These (இவை) | ,, | Those (அவை) | ,, |
| Here (இங்கே) | ,, | There (அங்கே) | ,, |
| Our (எங்களுடைய | ,, | Their (அவர்களுடைய) | ,, |
| Ago (முன்பு) | ,, | Before (முன்னால்) | ,, |
| Today (இன்று) | ,, | That day (அந்தநாள்) | ,, |
| Tomorrow (நாளைக்கு) | | The next day (அடுத்தநாள்) | |
| | எனும்சொல் | | எனமாறும் |
| yeseterday (நேற்று) | ,, | The day before(முந்தினநாள்) | ,, |
| I (நான்) | ,, | He (அவன்) | ,, |
| My (என்னுடைய) | ,, | His (அவனுடைய) | ,, |
| We (நாம்) | ,, | They (அவர்கள்) | ,, |
| Me (எனக்கு) | ,, | Him (அவனுக்கு) | ,, |

| | | | |
|---|---|---|---|
| Wiil | ,, | Would | ,, |
| Shall | ,, | Should | ,, |
| May | ,, | Might | ,, |
| Can | ,, | Could | ,, |

1. Present Tense Verb ஆனது Past Tense ஆக மாறும்.

   உதாரணம் : go — Went

2. Present Continuous Tense Verb ஆனது Past Continuous Tense ஆக மாறும் (உதாரணம் : is going was going)
3. Present Perfect Tense Verb ஆனது Past Perfect Tense ஆக மாறும் உதாரணம் have gone – had goned
4. Present Perfect Continnous Tense Verb ஆனது Past Continuous ஆக மாறும். உதாரணம் : have been going had been going
5. aid எனும் சொல் Said என்றே வரும்
6. Said to எனும் சொற்கள் Told என மாறும்

மேற்காணும் பொதுவான விதிகளை நன்கு மனப்பாடம் செய்து கொள்ளவும்.

சில வாக்கியங்களில் நேர்க்கூற்றிலுள்ள I, We, You எனும் சொற்கள் அயற்கூற்றிலும் (Indirect Speech) I, We, You என மாறாமல் வரும். வாக்கியங்களின் அமைப்பு அவ்வாறு இருக்கும். அவற்றை நாம் நன்கு அர்த்தம் செய்துகொண்டு, அந்த வாக்கியத்தின் அமைப்பின்படி சொற்களை ஆங்கிலத்தில் பயன்படுத்த வேண்டும்.

கீழ் வரும் உதாரணங்கள் அவற்றை நன்கு விளக்கும்: உதாரணங்களை நன்கு கவனிக்கவும்.

1. I said to Balu, " will Wirte a letter," (Direct Speech)
   " நான் ஒரு கடிதம் எழுதுவேன்." என நான் பாலுவிடம் சொன்னேன். (நேர்க்கூற்று)

   What did you say to Balu?
   நீ பாலுவிடம் என்ன சொன்னாய்?

2. I told Balu that I would write a letter. (Indirect Speech)
   நான் ஒரு கடிதத்தை எழுதப் போவதாக பாலுவிடம் சொன்னேன்.

குறிப்பு: மேற்கூறிய உதாரணத்தில் Direct Speech ல் உள்ள I எனும் சொல்லே Indirect Speech லும்வருவதைக் கவனிக்கவும். ஏனெனில்- நேர்க்கூற்றைக் கூறியவாறே அயற்கூற்றையும் கூறுவதைப்போன்று வாக்கிய அமைப்பு இருப்பதால் இவ்வாறு வந்துள்ளது.

கீழ்க்கண்ட உதாரணங்களும் அவ்வாறே ஆகும்.

1. We said, We will sing. (Direct Speech)
"நாம் ஒரு பாட்டைப் பாடுவோம்" என்று கூறினோம். (நேர்க்கூற்று)

2. We said that we would' sing. (Indirect Speech)
நாம் ஒரு பாட்டைப் பாடப் போவதாக நாம் கூறினோம் (அயற்கூற்று)

குறிப்பு: Indirect Speech லும் "We" எனும் சொல் வந்துள்ளதை கவனிக்கவும். ஏனெனில் நேர்க்கூறறைக் கூறியவரே அயற்கூற்றையும் கூறுவதால் இவ்வாறு வாக்கியஅமைப்பு உள்ளது.

1. I said, "You are a good boy. Direct (Speech)
"நீ ஒரு நல்ல சிறுவன்" என்று நான் கூறினேன். (நேர்க்கூற்று)

2. I said that you were a good boy. Direct (Speech)
" நான், நீ ஒரு நல்ல சிறுவனாக இருககிறாய் எனக் கூறினேன். (அயற்கூற்று)

"You" எனும் சொல் Direct and Indirect இரண்டிலும் வருவதை கவனிக்கவும். வினைச்சொல் "are" என்பது "were" ஆக indirectல் மாறுவதையும் கவனிக்கவும்.

மேலும் சில உதாரணங்கள்:

1. I said you, "You made this box."(Direct Speech)
நான் உன்னிடம் "நீ இந்தப் பெட்டியைச் செய்தாய்" எனக் கூறினேன். (நேர்க்கூற்று)

2. I told you that you had made that box. (Indirect Speech)
நான் உன்னிடம் நீ அந்தப் பெட்டியைச் செய்தாய் எனக் கூறினேன். (அயற்கூற்று)

1. We said, "We have done these work" (Direct Speech)
"நாம் இந்த வேலைகளைச் செய்துள்ளோம்" என்று கூறினோம். (நேர்க்கூற்று)

2. We said that we had done those work. (Indirect Speech)
நாம் அந்த வேலைகளைச் செய்துள்ளதாக நாம் கூறினோம்.
(அயற்கூற்று)

குறிப்பு: மேற்கூறிய வாக்கியங்களில் Direct ல் உள்ள "made, எனும் இறந்தகால வினைச் சொல் Indirect "had made' என வினைமுற்று இறந்தகால மாக மாறியுள்ளதை கவனிக்கவும். அவ்வாறே "this" என்பது "that" ஆகவும், these என்பது those ஆகவும், "have done" என்பது "had done" ஆகவும் மாறியுள்ளதை கவனிக்கவும்.

## EXERCISE - பயிற்சி

ஒரு ஆங்கிலப் பாட புத்தகத்தை எடுத்து மேற்கூறிய Direct Speech, Indirect Speech இரண்டுக்கும் சேர்ந்த வாக்கியங்கள் வகைக்குப் பத்தாகப் பொறுக்கி எடுத்து' நோட்புக்கில் எழுதவும், பயிற்சிகளைத் தவறாது செய்தல் ஆங்கில அறிவை நிச்சயமாக வளர்க்கும்.

## QUESTIONS — வினாக்கள்

### From Direct to Indirect Speech

உதாரணம்:

1. Raju said to Balu, "What are you doing here?"
(Direct Speech)
" நீ இங்கு என்ன செய்கிறாய்' ' என்று ராஜு பாலுவிடம் கூறினான். (நேர்க்கூற்று)

2. Raju asked Balu what he was doing there
(Indirect Speech)
ராஜு பாலுவிடம் அவன் அங்கு என்ன செய்கிறான் என்று கேட்டான் (அயற்கூற்று)

குறிப்பு: இவ்வினா வாக்கியத்தில் Directல் உள்ள "said to" என்பது " asked" என Indirectல் மாறுகிறது தவிர what எனும் சொல்லுக்கு அடுத்து he என்னும் எழுவாய் வருகிறது. Indirectல் வினாக்குறி இருக்காது.

What (என்ன), Where (எங்கே), Why (ஏன்), How (எவ்வாறு) When (எப்பொழுது) ஆகிய சொற்கள் வினாச்சொற்கள் ஆகும். இவற்றில் வாக்கியங்கள் அமைப்பதை கவனிப்போம்.

1. I said to Kasi, Where are yon going now?" (Direct)
I asked Kasi where he was going then. (Indirect)
2. She said to Nalini, "why are you crying?" (Direct)
She asked Nalini, why she was crying, (Indirect)
3. He said to Vasu "How can you stay here?" (Direct)
He asked vasu How he could stay there (Indirect)
4. Ram said to Mani,!' When will you come tomorrow" (Direct)
Ram asked mani when he would come the next day (Indirect)

குறிப்பு: கோடிட்ட சொற்கள் Directலிருந்து Indirect ஆக எழுதும்போது மாறுவதை கவனிக்கவும்.

## EXERCISE — பயிற்சி

கீழ்க்கண்ட நேர்க்கூற்று வினாவாக்கியங்களை அயற்கூற்றாக மாற்றுக.

1. I said to Ram, "Why are yon singing now"?
2. Raju said to Anwar "Where is your pencil"
3. He said to Babu, "When will the bus start?"
4. She said to sarada, "How will you get money?"
5. John said to David, "What can you give me now?"
6. Kasi said to Balu, "can we go tomorrow?"
7. Rangan said to Hari, "How wil you go now?"
8. Ravi said to am, "what is yor plan?"
9. David said Ahmed, "Where is my pen?"
10. Palani said to Vasu, "When can we go?"
11. Hari said to mani, "Why are you dancing here?"
12. John said to Balu, "How can Ram pass this test"
13. Sarasu said to Malini, "What have you done here?"
14. Mani said to Hari, "Where can you get this book?"
15. Selvan said to Vasu, "How is your brother's health?"

குறிப்பு: மேற்கூறிய வாக்கியங்களை எளிதில் தமிழில் நாம் பொருள்கண்டு கொள்ளலாம். ஏதாவது சொல்லுக்குப் பொருள் தெரியாவிடில் ஆங்கில அகராதியினைப் பயன் படுத்தவும். அகராதியை அடிக்கடி பயன்படுத்துதல் மிகமிக அவசியம். அதிக ஆங்கில சொற்களை நாம் விரைவில் கற்க அது உதவும்.

### WHETHER'' ''IF'' எனும் சொற்களைப் பயன்படுத்துதல்

Direct Speech (நேர்க்கூற்று) லிருந்து Indirect Speechக்கு (அயற்கூற்று, மாற்றும்போது Whether,. If எனும் இரு சொற்களை இணைப்புச் சொற்களாகப் பயன்படுத்தும் முறையினைக் காண்போம்.

உதாரணம் :

1. Ravi said to Balu, ''Can you play Tennis?'' (Direct

   '' நீ டென்னிஸ் விளையாடுவாயா?'' என்று ரவி பாலுவிடம் சொன்னான். (நேர்க்கூற்று)

2. Ravi asked Balu whether he could play Tennis (Indirect)

   ரவி பாலுவிடம் அவனால் டென்னிஸ் விளையாட முடியுமா என்று கேட்டான் (அயற்கூற்று)

1. Mani said to Vasu, ''Have you ten rupees with you?'' (Direct)

   ''உன்னிடம் பத்து ரூபாய்கள் உள்ளனவா'' என்று மணி வாசுவிடம் சொன்னான். (நேர்க்கூற்று)

2. Mani asked Vasu if he had ten rupees with him (Indirect)

   மணி வாசுவிடம் பத்துரூபாய்கள் அவனிடம் உள்ளனவா என்று கேட்டான். (அயற்கூற்று)

குறிப்பு: மேற்கூறிய வாக்கியங்களின் Whether. if என்பவற்றை எவ்வாறு இணைப்புச் சொற்களாகப் பயன்படுத்துவதென்பது காட்டப்பட்டுள்ளது. மாற்றங்கள் நினைவில் வைத்துக்கொள்ளவும்

### COMMANDS கட்டளைகள் (Direct to Indirect)

உதாரணம்:

1. The teacher said to Ram. ''Write this lesson now'' (Direct)

   ''இந்தப் பாடத்தை இப்போழுதே எழுது'' என்று ஆசிரியர் ராமிடம் கூறினார். (நேர்க்கூற்று)

2. The teacher ordered Ram to write that lesson then' (Indirect)

   ஆசிரியர் ராமிடம் அந்தப் பாடத்தை அப்பொழுதே எழுதுமாறு கட்டளையிட்டார் (அயற்கூற்று)

said to Kasi, "stand here" (Direct)
"இங்கு நில்" என்று நான் காசியிடம் கூறினேன். (நேர்க்கூற்று)

2. I ordered Kasi to stand there. (Indirect)
நான் காசியிடம் அங்கு நிற்கும்படி கட்டளையிட்டேன்.
(அயற்கூற்று)

குறிப்பு: மேற்கூறியவற்றில் "said to" என்பது ordered (கட்டளையிடுதல்) என மாறியுள்ளது. மற்ற மாற்றங்கள் கோடிட்டு காட்டப்பட்டுள்ளன. நன்கு மனப்பாடம் செய்யவும். தவிர Write (எழுது) எனும் வினைச்சொல் "to write" எனும் Infinitive ஆகவும் Stand என்பது "to stand" எனும் Infinitive ஆகவும் மாறியுள்ளன.

## REQUESTS — வேண்டுகோள்கள் (Direct to Indirect)

1. Kannan said to David, "Please give me a pen." (Direct)
"தயைகூர்ந்து ஒரு பேனாவை எனக்குக் கொடு" என்று கண்ணன் டேவிட்டிடம் கூறினான். (நேர்க்கூற்று)

2. Kannan requested David to give him a pen. (Indirect)
கண்ணன் டேவிட்டிடம் அவனுக்கு ஒரு பேனாவைக் கொடுக்கும்படி வேண்டினான். (அயற்கூற்று)

குறிப்பு: இதில் "said to" என்பது "requested" எனவும், "give" என்பது "to give" எனவும் மாறியுள்ளன. "please" (தயைகூர்ந்து) எனும் சொல் Indirect நீக்கப்பட்டுள்ளதை கவனிக்கவும்.

1. She said to Sarasu, "Don't go alone in a forest" (Direct)
"தனியாகக் காட்டில் போகாதே" என்று அவள் சரசுவிடம் கூறினாள். (நேர்க்கூற்று)

2. She advised Sarasu not to go alone in forest (Indirect)
அவள் சரசுவிடம் தனியாக காட்டில் போகவேண்டாமென்று அறிவுரை கூறினாள். (அயற்கூற்று)

குறிப்பு; இதில் Said to என்பது advised எனும் சொல்லாகவும் "Don't go" என்பது "not to go" என்றும் மாறியுள்ளதை கவனிக்கவும்.

## EXCLAMATORY SENTENCES — வியப்பு வாக்கியங்கள்
### Direct to Indirect Speech

உதாரணம் :

1. David said to Anwar, 'Alas! I have lost my purse'' (Direct)
''ஐயோ! நான் என் பணப்பையை இழந்து விட்டேன்' என்று டேவிட் அன்வரிடம் கூறினான். (நேர்க்கூற்று)
2. David exclaimed to Anwar that he had lost his purse (Indirect)
டேவிட் அன்வரிடம் அவன் தன் பணப்பையை இழந்துவிட்டதாக சோகத்துடன் கூறினான் (அயற்கூற்று)
1. Sarada said to Nalini, "What a beautiful garden." (Direct)
"என்ன அழகான தோட்டம்!" என்று சாரதா நளினியிடம் கூறினாள் (நேர்க்கூற்று)
9. Sarada exclaimed to Nalini that it was a beautiful garden (Indirect)
சாரதா நளினியிடம் அந்தத்தோட்டம் மிக அழகாக இருப்பதாகக் கூறி வியந்தாள் (அயற்கூற்று)

குறிப்பு: இதில் said to என்பது "exclaimed'' என மாறியுள்ளது. அடுத்து வியப்பைத் தெரிவிக்கும் Alas, What போன்ற சொற்கள் Indirectல் நீக்கப்பட்டுள்ளன. இவற்றை நினைவில் இருத்தவும்.

## EXERCISE – பயிற்சி

கீழ்க்கண்ட Direct Speech வாக்கியங்களை Indirect Speech வாக்கியங்களாக மாற்றுக.

1. Vasu said to Ravi, "Can you make a box?"
2. John said to Ramu, "Have you written the letter?"
3. The officer said to the peon, "Clean the table"
4. The Teacher said to mani, "Tell the poem."
5. Kasi said to David, "Plese come with me"
6. Ahmed said to Balu, "Dont talk rudely"
7. Nalini said to sarada, "what a nice saree!"
8. Meena said to Sarasu, How nicely you sing!"
9. The Inspector said to the thief, "Tell me the truth"
10. Mani said to David, Have you gone to a hotel?"
11. Raju said to seenu, "Can you lift this bench?"
12. Vani said to Rani, "Plese give me your pen"
13. Kasi said to John, "Don't touch my book"

14. Ramu said to Anwar, "What a pretty shirt!"
15. Devi said to meena, "Alas! my aunt is sick!"
16. Vasu said to Ramu, "Have you played foot ball!"

# FRAMING OF QUESTIONS
## வினாக்களை அமைத்தல்

ஆங்கில வாக்கியங்களில் காணப்படும் Am, Are, Were, Is Was, Will, Would, Shall, Should, May, Can, Could ஆகிய சொற்களை வாக்கியத்தின் முதல் சொல்லாக மாற்றி வினாக்களை அமைக்கலாம்.

உதாரணங்களைக் கவனிக்கவும்.

1. I am a teacher.
   நான் ஒரு ஆசிரியன்
   Am I a teacher?
   நான் ஒரு ஆசிரியனா?

மேலுள்ள வாக்கியத்தினை வினாவாவாக மாற்ற என்ன செய்யப் பட்டுள்ளது? Iக்கு அடுத்து இருந்த Am எனும் சொல்லை முதல் சொல்லாக Iக்கு முன் எடுத்து எழுதப்பட்டுள்ளது Am I a teacher? எனும் வாக்கியம் வினாவாக மாறிவிட்டது நாம செய்ததெல்லாம் Am எனும் சொல்லை இடமாற்றம் செய்தது மட்டுந்தான். உடனே வினா உருவாகிவிட்டது. இவ்வாறே மற்ற சொற்களையும் கொண்டு வினாக்கள் உருவாகலாம். எவ்வாறு என்பதனைக் கீழுள்ள உதாரணங்கள் விளக்கும்.

SENTENCE *(வாக்கியம்)*

1. We are pupils.
   நாம் மாணவர்கள்.

QUESTION *(வினா)*

Are We pupils?
நாம் மாணவர்களா?

SENTENCE *(வாக்கியம்)*

2. We were reading.
   நாம் படித்துக்கொண்டிருந்தோம்.

QUESTION (வினா)

Were We reading?
நாம் படித்துக் கொண்டிருந்தோமா?

SENTENCE (வாக்கியம்)

3. He is a postman.
அவன் ஒரு தபாற்காரன.

QUESTION (வினா)

Is he a post man?
அவன் ஒரு தாபாற்காரனா?

SENTECE (வாக்கியம்)

4. She was writing.
அவள் அழுதிக் கொண்டிருந்தாள்.

QUESTION (வினா)

Was she writing?
அவள் எழுதிக கொண்ருந்தாளா?

SENTENCE (வாக்கியம்)

5. He can do it.
அவன் அதை செய்ய இயலும்.

QUESTION (வினா)

Can he do it?
அவனால் அதை செய்யஇயலுமா?

SENTENCE (வாக்கியம்)

6. He could sing.
அவனால் பாடவியலும்.

QUESTION (வினா)

Could he sing?
அவனால் பாடவியலுமா?

SENTENCE (வாக்கியம்)

7. Vasu will go there.
வாசு அங்கு போவான்.

QUESTION (வினா)

Will vasu go there?
வாசு அங்கு போவானா?

SENTENCE (வாக்கியம்)

8. He would tell the truth.
அவன் உண்மையைக் கூறுவானா.

QUESTION (வினா)

Would he tell the truth.

அவன் உண்மையைக் கூறுவானா?

SENTENCE (வாக்கியம்)

9. He shall come here.

அவன் இங்கு வருவான்.

QUESTION (வினா)

Shall he come here?

அவன் இங்கு வருவானா?

SENTENCE (வாக்கியம்)

10. He should draw pictures.

அவன் படங்களை வரையவேண்டும்.

QUESTION (வினா)

Should he draw pictures?

அவன் படங்களை வரையவேண்டுமா?

SENTENCE (வாக்கியம்)

11. Sita may clean the room.

சீதா அறையை சுத்தம் செய்யலாம்.

QUESTON (வினா)

May sita clean the room?

சீதா அறையை சுத்தம் செய்யலாமா?

குறிப்பு: ஒரே ஒரு சொல்லை இடமாற்றம் செய்வதால் எவ்வாறு வினாக்கள் உருவாகின்றன என்பதை கவனிக்கவும்.

இதற்கு அடுத்து ஆங்கிலத்தில் Why (ஏன்) What (என்ன) Where (எங்கே) When (எப்பொழுது) Who (யார்) எனும் வினைச்செற்களை வாக்கியத்தின் முன் எழுதி வினாக்களை அமைப்பதைக் கீழ்க்காணும் உதாரணங்கள் விளக்கும்.

உதாரணங்கள்:

1. Why are you laughing?

   நீ ஏன் சிரிக்கிறாய்?

2. What is your name?

   உன் பெயர் என்ன?

3. When will you come?

   நீ எப்பொழுது வருவாய்?

4. Where shall we go?
நாம் எங்கே போகலாம்?

5. Who is your brother
உன்னுடைய சகோதரன் யார்?

குறிப்பு: வினாச்சொற்கள் அனைத்தும் வாக்கியத்தின் முதல்சொல்லாக அமைவதை கவனிக்கவும்.
அடுத்து Do, Does, Did எனும் சொற்களை வாக்கியத்தின் முன் எழுதி வினாக்கள் அமைக்கும் முறையை கவனிக்கவும்.

1. Do you want this book?
உனக்கு இந்தப் புத்தகம் வேண்டுமா?
2. Did you write this letter?
நீ இந்தக் கடிதத்தை எழுதினாயா?
3. Does he go there?
அவன் அங்கு சென்றானா?

குறிப்பு: மேற்கூறிய வாக்கியங்களில் முதல் வாக்கியத்தில் வந்துள்ள Do என்பது நிகழ்கால வினாச் சொல்லுக்கு தன்னிலை, முன்னிலை, படர்க்கை. பன்மைக்கு மட்டும் பயன்படுத்தப்படும். (உதாரணம்: Do I go there? Do we go there? Do you go there? Do they go there? முலியன)

ஆனால் Does என்பது படர்க்கை ஒருமையான He, she, Rama, Nalini போன்ற எல்லா ஒருமைச்சொற்களுக்கும் பயன் படுத்தப்படும். (உதாரணம்: Does he go there? Does she go there? Does Rama go there? Does Nalini go there? முதலியன Does என்பது நிகழ்கால வினாக்களுக்கு மட்டும் பயன் படுத்தப்படும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவும்.

உதாரணம்: He goes there. Does he go there?

குறிப்பு: வினைவில் goes என்பது go வாக மாறியிருப்பதை கவனிக்கவும். இவ்வாறே மற்ற சொற்களும் மாறும்.

உதாரணம்:

He likes tea

Does he like tea?

She reads a book

Does she read a book?

இனி Did என்பது இறந்தகால வினைச்சொற்களுக்கு மட்டும் தன்னிலை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களுக்கும் ஒருமைக்கும் பன்மைக்கும் பயன் படுத்தப்படும்.

உதாரணம்:

1. He went there
   Did he go there?
2. She come here
   Did she come here?
3. You took a book
   Did you take a book?

குறிப்பு: Went எனும் சொல் இறந்தகால வினைச்சொல் ஆகும். ஆனால் Did பயன்படுத்திய வினாவில் go எனும் நிகழ்கால வினைச் சொல்லாக மாறுவதைக் கவனிக்கவும். இவ்வறே மற்ற Past Tense Verb களும் Present Tense Verb களாக மாறும்.

Exercise பயிற்சி: இத்தகய வினா வாக்கியங்கள் வகைக்குப் பத்தாக ஒரு ஆங்கில புத்தகத்திலிருந்து பொறுக்கி எடுத்து எழுதிப் பயிற்சி புரியவும்.

# 29. LETTER - WRITING
## கடிதங்கள் எழுதுதல்

ஆங்கில கடிதங்கள் எழுதும் போது நாம் சில விதிகளைப் பின் பற்றவேண்டும். அவை பின்வருமாறு:-

கடிதங்கள் 1. Business Letter (வியாபாரக் கடிதங்கள்)
2. Social and Friendly Letter (உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு எழுதும் கடிதங்கள்)

ஆகியவற்றை எழுதும் முறையினைக் காண்போம்.

ஆங்கில கடிதத்தின் ஆறு பகுதிகள் பின்வருமாறு:-

1. HEADING (தலைப்பு) இதில் கடிதம் அனுப்புவரின் விலாசமும், தேதியும் இருக்க வேண்டும். வியாபார நிறுவனங்களில் அச்சடிக்கப்பட்ட Letterheads (முகவரிக் கடிதத்தாள்கள்) இருக்கும். அவற்றில் தேதியை மட்டும் குறிப்பிட்டால் போதுமானது.

2. SALUTATION (வணக்கவுரை)

அ) வியாபாரக் கடிதங்களில் தனிப்பட்ட ஒரு வணிகராய் இருந்தால் "Dear sir" (அன்புள்ள ஐயா) என்றும் பலருள்ள நிறுவனமாக (Company) இருந்தால் "Dear sirs" (அன்புள்ள ஐயன்மீர்) எனவும் எழுதவேண்டும். மாதிரி (model) கடிதம் இம்முறையை நன்கு விளக்கும். அதனைக்காண்க.

ஆ) தந்தை, தாய் மற்ற உறவினர், பெரியவர்களுக்கு — Dear Father<br>Dear mother<br>Dear Uncle அன்புள்ள மாமா<br>Deat Aunt அன்புள்ள அத்தை<br>Deat sir (அன்புள்ள ஐயா)<br>எனக்குறிப்பிட வேண்டும்.

இருநண்பர்களுக்கு — Dear Ramu, Dear Sarasu Dear John என்று Dearவுடன் தோழன் அல்லது தோழியின் பெயரை எழுதவேண்டும் Dear Friend (அன்புள்ள நண்பரே) என எழுதக்கூடாது.

3. MESSAGE) கடிதச்செய்தி — இதில் கூற வேண்டிய முக்கிய செய்தியை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதவேண்டும். செய்தி நீளமாக இருந்தால் பகுதிகளாக (Paras) பிரித்துக்கொள்ள வேண்டும்.

4. SUBSCRIBTION (வணக்க முடிவுரை) இதில் தாய் தந்தை உறவினர் நண்பர்கள் ஆகியோருக்கு இவ்வாறு எழுதவேண்டும். — Yours affectionately (தங்கள் அன்புள்ள) அல்லது Yours lovingly (தங்களன்புள்ள அல்லது Your affectionate son தங்களன்புள்ள மகன்

வயது முதிர்ந்த நண்பர்கள் பெரியவர்களுக்கு — Yours sincerely (தங்கள் உண்மையுள்ள, Your truly (தங்கள் உண்மையுள்ள)

| | |
|---|---|
| வியாபாரிகள் | Yours faithfully *(தங்கள் நன்றி யறிதலுள்ள)* Yours truly *(தங்கள் உண்மையுள்ள)* |

குறிப்பு: பலர் பங்குதாரராக இருக்கும் வணிக நிறுவனத்தில் "For Rubber stamp" (ரப்பர் முத்திரை) இருக்கும். அதை Your faithfullyக்கு கீழே பதிவு செய்து பிறகு கையெழுத்தினைப் போடவேண்டும். Model Letterயை நன்கு கவனிக்கவும். இவ் விஷயம் நன்கு தெளிவாகும்.

| | |
|---|---|
| 5. SIGNATURE (கையெழுத்து) | கடிதம் அனுப்புபவர் தெளிவாகத் தன் கையெழுத்தைப் போட வேண்டும். கையெழுத்து கோழி கிறுக்கலாக இருந்தால், அதன் கீழ், தெளிவான எழுத்துக்களில் பெயரை எழுதுதல் நல்லது. |
| Superscrption *(கடிதம்பெறு பவரின் விலாசம்)* | விலாசத்தைக் கீழ்க்கண்டபடி தெளிவாக எழுதவேண்டும். அதில் அஞ்சல் எண் வீட்டு எண் முதலியன தெளிவாக இருக்க வேண்டும். |

**உதாரணம்**

| *வியாபார நிறுவனம்* | *தனிப்பட்டவர்* |
|---|---|
| Mahaluxmi Printers, | R. S. Ganesan |
| No. 37, Kandy Road, | 14, Love lane, |
| Chundukuly, | |
| Jaffna. | Batticaloa. |

மேற்கூறிய ஆறு பகுதிகளைப்பற்றி நன்கு கவனித்து ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதும் போது இதனைப் பின்பற்றவும்.

## MODEL LETTERS
மாதிரிக் கடிதங்கள்

# 30. BUSINESS LETTERS
# வியாபாரக் கடிதங்கள்

1. ஒரு தனிப்பட்ட வியாபாரி மற்றொரு வியாபாரிக்குக் கடிதம் எழுதும்போது சுருக்கமாக எழுதவேண்டும். காலத்தை மீதமாக்க இது பயன்படும்.

2. கோரிக்கைகள் வேண்டுகோள்கள் விடுக்கிறமாதிரியில் இருக்க வேண்டும். உத்தரவிடும் முறையில் இருக்கக்கூடாது.

3. ஏதாவது கடிதப்போக்குவரத்து முன்பே நடந்திருந்தால் அதன் (Reference - பார்வை) எண், தேதி ஆகியவற்றை Ref:- எனக் குறிப்பிடவேண்டும்.

4. வணக்க முடிவுரையில் (Subscription) Your's faithfully (தங்கள் நன்றியறிதலுள்ள) Your's truly (தங்கள் உண்மையுள்ள) என எழுதி அதன்கீழ் கையெழுத்திடவேண்டும். (For Rubber Stamp) நிறுவனத்தின் ரப்பர் முத்திரை இருந்தால் அதைப் பதித்துவிட்டு, அதன்கீழ் கையெழுத்திட வேண்டும். (Model Letters) மாதிரிக் கடிதங்களைப் பார்க்க.

5. கடிதம் பெறும் வணிகரின் அல்லது வணிக நிறுவனத்தின் விலாசத்தைக் கடிதத்தின் இடது பக்கத்தில் கடிதம் எழுதும் முன் எழுதவேண்டும். கடிதம் அனுப்புபவரின் விலாசம் வலதுபக்கத்தில் கடிதத்தின் தலைப்பில் குறிப்பிடவேண்டும். Letter Heads (அச்சிடப்பட்ட கடிதத்தாள்கள்) உள்ள வணிகரோ அல்லது நிறுவனமோ விலாசத்தை எழுதவேண்டியதில்லை. வெறும் தேதியை மட்டும் குறித்தால் போதும்.

6. தபால் உறையின் மேல் கடிதம் பெறுபவரின் விலாசம் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

இனி மாதிரிக் கடிதங்களை (Model Letters) காண்க.

## Model Letter 1

தனிப்பட்ட வியாபாரி மற்றொரு வியாபாரிக்கு சில பொருட் களை அனுப்பக்கோரும் கடிதம். இவர் Letter - pad இல்லாதவர்

13, Central Road,
Batticaloa.
14 th March 1994

To.
G. Kugan,
Sivasakthy Textiles,
Kaithady.

Dear Sir

Ref : Your letter 21, dated 6th April, 1994. With reference to the above, please send the following goods by T V S Lorry Transport at an early date:-

1. 90 cm Cotton Banians — 100 numbers
2. 80 cm Cotton Banians — 100 numbers

Kindly send the Lorry receipt etc, through Peoples Bank as usual. I will take delivery of them on rceeipt.

Thanking you,
Yours faithfully,
S. Kandasamy

## Model Letter 2

ஒரு வியாபார நிறுவனம், மற்றொரு வியாபார நிறுவனத்துக்கு சில பொருட்களை அனுப்பக்கோரும் கடிதம்.

Date 2nd may 1993

| Sri Ganesha Stores<br>Kandy Road,<br>Kaithady. |
|---|

→ இது அச்சடிக்கப்பட்ட விலாசம் என்பதை கவனிக்கவும். இது Letter head அகலத்துக்கும் நீளமாக அச்சடிக்கப் பட்டிருக்கலாம்.

To

Messrs, Welegama Stores,
Cement Distributors,
4th, Cross Street,
Colombo II

Dear Sirs,

Ref : Your letter No. 29, dated 28th April, 1988

We shall be much obliged if you kindly send 2000 empty Gunny bags through Railway parcel service. The L/R etc., may be sent through bank as usual. Awaiting your kind response.

Thanking you,
yours Truly,
For Sri Ganesha Stores,
S. Rasiah
Manager.

குறிப்பு: For முத்திரையில் Manager/Partner என இருக்கும். அதன் மேல் கையெழுத்திட வேண்டும்.

## Model Letter 3

(ஒரு வணிக நிறுவனத்திற்கு மற்றொரு வணிக நிறுவனம் பொருட்கள் வாங்கிய வகையில் ரூ. 8000 பாக்கித் தொகை (நிலுவைத் தொகை) தரவேண்டும். ஆனால் இரு மாதங்களாகியும் பணம் அனுப்பவில்லை. அதை அனுப்பக் கோரும் கடிதம்)

Leelavathy Stores,
Cement Delars,
Kaithady junction
Kaithady.

Dated 18th May 1993

To
R. K. V. & Co.
Cement Distributors,
Anandanagar,
Kaithady.

Dear Sirs,

Ref : Our Bill No. 305 Dated 15th March 1993 for Rs, 8000/- relating to the supply of Cement bags to you.

We wish to draw your kind attention that we have not yet received payment for the above bill. Please remit the above amount on receipt of this letter.

Thanking you
For manian & co
T. Pusparaj

## Model Letter - 4

(ஒரு நிறுவனம் வங்கி மூலம் அனுப்பிய பொருளை மற்றொரு நிறுவனம் 20 நாட்களாகியும் எடுக்கவில்லை. அந்த உடனே எடுக்கக் கோரி எழுதும் கடிதம்.)

MANIAN & CO,
Cement Dealers
28, K. K. S, Road
ChunnaKam

Dated 19th April 1988

TO
M/s Sivearaj & co,
Cement Distributors,
14, Hospital Road
Jaffna

Dear sirs,

Ref; Our Bill No. 42, dated 22nd March, 1988 sent to you through Bank of ceylon.

We regret to note that you have not yet taken delivery of the documents from the bank even though more than 25 days have elapsed since the date of despatch of the same.

Please take delivery of the same from the bank immediately.

Thanking you
For manian & co,
K. Sivarajah
Manager

## Model Letter - 5

(ஒரு வணிக நிறுவனம் தன்னோடு வணிகத்தொடர்புள்ள வணிக நிறுவனம் வெகுநாட்களாகியும் பொருட்களை வாங்காததால், மீண்டும் வணிகத் தொடர்பை ஏற்படுத்தக்கோரும் கடிதம்)

MANIAN & CO,
Cement Dealers,
28, K. K. S. Road
Chunnakam

Dated 3rd May 1993

TO

M/s Sivaraj & co,
Cement Distributors,
14, Hospital Road
Jaffna

Dear sir,

We have not been favoured by your esteemed orders for cement since 4 months. We shall be much obliged it you kindly send your orders for your requirements at an early date.

Expecting your kind letter.

Thanking yon
Yours faithfully,
For manian & co.,
K. Sivarajah
Manager.

# 31. SOCIAL AND FRIENDLY LETTERS AND STUDENT LETTERS

# உறவினர் நண்பர் மாணவர் ஆகியோர் எழுதும் கடிதங்கள்

## Model Letter - 1

*(உனக்கு ஒரு பேனாவை பிறந்தநாள் பரிசாக அனுப்பிய மாமனுக்கு நன்றி கூறிஒரு கடிதம் எழுதுக)*

| | |
|---|---|
| 1) Heading<br>*தலைப்பு* | Palai North<br>Palai<br>7th April, 1993 |
| 2) Salutation<br>*வணக்கவுரை* | Dear uncle· |
| 3) Message<br>*செய்தி* | I thank you very much for sending me a pen as a present on my birth - day. It writes well kindly convey my best wishes and regards to my aunt.<br>With my love to you both. |
| 4) Subscription<br>*வணக்கமுடிவுரை* | I am,<br>Yours affectionately, |
| 5) Signature<br>*கையெழுத்து* | M. Maniam |
| 6) Superscription<br>*கையெழுத்து பெறுபவரின் விலாசம்* | MR. K. Sinnadurai<br>Kopay East<br>Kopay. |

குறிப்பு:

1) Heading கடிதத்தின் வலது ஓரத்தில் எழுதப்பட வேண்டும். அதன்கீழ் தேதியிட வேண்டும். இது கடிதம் எழுதி அனுப்புபவ ரின் விலாசம் என்பதைக் கவனிக்கவும்.

2) Salutationல் "அன்புள்ள மாமா" (Dear uncle) என எழுதப்பட் டுள்ளது.

3) Message சுருக்கமாகவும், தெளிவாகவும் இருப்பதைக் கவனிக்கவும்.

4) Subscriptionல் Yours affectionately (தங்கள் அன்புள்ள) என எழுதப்பட்டுள்ளது.

5) Signature (கையெழுத்து) Subcriptionக்குக் கீழே போடப்படுகிறது.

6) Superscription என்பது கடிதம் பெறுவரின் விளாசமாகும் அதில அஞ்சல் எண், வீட்டு எண் ஆகியவை தெளிவாக எழுதியுள்ளதை கவனிக்கவும். இதைத் தபால் உறையின் மேல் எழுதவேண்டும்.

## Model Letter - 2

(பிறந்த நாள் விருந்திற்கு உன் நண்பனை வரக்கூறி ஒரு கடிதம் எழுது)

Madduvil North,
Chavakachcheri.
8th march, 1993

Dear Rajan,

My birth - day falls on 12th march. A party has been arranged by my father to celebrate the same on that day I shall be happy if you come over here at 4p. m on that day. Please come.

With best wishes and love.

Your loving friend
M. Mohanaraj

To

Master S. Rajan
Kokuvil North,
Kokuvil.

## Model Letter - 3

(ஒரு புத்தக நிறுவனத்துக்கு புத்தக விலைப்பட்டியலை அனுப்பக் கோரி ஒரு கடிதம் எழுதுதல்)

From

A. Rajadurai
30, Kandy Road,
Ariyalai,
Jaffna.

To

Sri Lanka Book Depot
K. K. S. Road,
Jaffna.

Dear Sirs

Our class library needs some English story books. Please send me a book - list by post. The order will be sent on its receipt.

Thanking you
Yours faithfully,
A. Rajadurai

Ariyalai
Jaffna.
5th march, 1993.

குறிப்பு: இக்கடிதத்தில் கடிதம் அனுப்புபவரின் விலாசமும், பெறுப வரின் விலாமும் இடது ஓரத்தில் ஒன்றின்கீழ் ஒன்றாகஎழு எழுதப்பட்டிருப்பதை கவனிக்கவும். தவிர ஊரின் பெயரும் தேதியும் கடிதத்தின் கிழ்ப் பகுதியில் இடதுபக்கமாக எழுதப்பட்டுள்ளன. கவனிக்கவும். கடிதம் பெறுபவரின் விலாசம் தபால் உறையின் ளேழுதவேண்டும்.

# STUDENTS LETTERS - மாணவர் கடிதங்கள்

## Model Letter-4

*(மூன்று நாட்களுக்கு விடுமுறை கோரி உங்கள் அதிபருக்கு ஒரு கடிதம் எழுதுக)*

Kopay South,
Kopay.
15th April, 1994

To
Principal
C. M. S. English School,
Kaithady.

Sir,

I have to attend my uncle's marriage at Kandy tomorrow. Please grant me leave for three days from today.

I am,
Yours obediently,
K. Sivakala

## Model Letter - 5

(உன் தந்தைக்கு அஞ்சல் காசுக்கட்டளை மூலம் ஐம்பது ரூபாய் அனுப்பக்கோரி ஒரு கடிதம் எழுதுக)

"Siva Illam"
Kaithady,
21st March, 1923

Dear father,

Thank you very much for your kind letter. You willbe glad to know that I had received first rank marks in the recent test. Our teacher has arranged for an excursion to Colombo next week. Please send me fifty rupees by money order to join with that excursicn party. How is mother? Convey my love and regards to her.

With my love to you and mother.

I am,
Your affectionate son,
K. Sivakumaran

To

Thiru M. S. Rasiah
Kaithady East
Kaithady

(குறிப்பு: மேலுள்ள விலாசத்தைத் தபால் உறையின்மேல் எழுத வேண்டும்)

